மலர்-4 இதழ்-74 செப்டம்பர் 16-30 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

## மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்

ஆன்மிகமலர்
mobile app
GET IT ON
Google Play

இலவச
e- magazine




# சூரியனுக்கு செயற்கைகோள்

# சூரியனை ஆராய்ந்த சித்தர்கள்

❖ செந்தாமரையில் அமர்ந்துள்ள தெய்வங்களை வழிபட பணம் பெருகும்.

❖ செவ்வாய்கிழமையில் செவ்வரளி மலரைக் கொண்டு முருகனை வழிபட்டால் காரியத்தடை நீங்கி வளம் பெருகும்.

❖ குபேரனுக்கு தாமரை திரி போட்டு விளக்கேற்றி வழிபட்டால் பணம் வரும்.

❖ கற்பக விநாயகரை 1008 அருகம்புல் கொண்டு மகாசங்கடஹர சதுர்த்தியில் வழிபட்டு வணங்கத் தொழிலில் தடைகள் நீங்கி லாபம் கிட்டும்.

❖ சுத்தமான நீரில் வாசனை திரவியம் கலந்து இருவேளையிலும் லட்சுமி மந்திரம் கூறியபடி தெளித்திட செல்வம் சேரும்.

❖ கோவிலில் லட்சுமி மீது வைத்த தாமரை மலரைக் கொண்டு வந்து பச்சை பட்டில் வைத்து மடித்து பணப்பெட்டியில் வைக்க பணம் சேரும்.

❖ இந்திராணி மந்திரம் ஜெபம் செய்ய ராஜயோக வாழ்வு வாழ பணம் கிடைக்கும்.

❖ ஐஸ்வர்ய தூப பொடியுடன், துளசி பொடியுடன் சேர்த்து அவரவர் தன ஓரையில் தூபம் போட செல்வம் குவியும்.

❖ பசுவுடன் கூடிய கன்றுக்கு உணவளித்தால் சகல செல்வங்களும் வந்தடையும்.

❖ சௌபாக்கிய பஞ்சதசி மந்திரம் ஜெபிக்க கோடிகணக்கில் பணம் தொழிலில் வரும்.

❖ பொதுவாக இறை பக்தியில் இருப்பவர்களிடம் ஆசிபெறுவது புண்ய பலம் கூடும். பண வரவு அதிகரிக்கும்.





❖ முழு பாசி பருப்பை வெல்லம் கலந்த நிரில் ஊற வைத்துபின் அதனை (மறுநாள்) பறவைக்கு, பசுவிற்குஅளித்திடவும். இதனை தொடர்ந்து செய்து வர பணத்தடைநீங்கும்.

❖ தனாகர்ஷண மூலிகை சட்டை பாக்கெட்டில் இருக்க பணம் வரத்து குறையாமல் இருக்கும்.

❖ ஏற்றிய விளக்கில் இருந்து கற்பூரத்தையோ ஊதுபத்தியையோ ஏற்றக்கூடாது. இது மகாலட்சுமியை அவமதிப்பது போன்றதாகும்

❖ தினசரி குளிக்கும் முன் பசுந்தயிரை உடல் முழுவதும்தடவி சிறிது நேரம் சென்று குளிக்க தரித்திரம் விலகும். குளித்தவுடன் முதுகை முதலில் துடைக்கவும் தரித்திரம்விலகும்.

❖ சொர்ணாகர்ஷன பைரவருக்கு தூய பன்னீரில் அவரவர் பிறந்த தினத்தில் அபிஷேகம் செய்திட பணம் சேரும்.

❖சம்பாதிப்பதில் ஒரு தொகையை சேர்த்து அதனைஅன்னதானத்திற்கு செலவிட அதனை போல் ஐந்து மடங்குநம்மிடம் வந்து சேரும்.

❖ வீட்டில் சுமங்கலியாக இறந்த பெண்களை நினைத்துமஞ்சளாக பிடித்து அவர்களை நினைத்து வழிபட, சகலதோஷங்கள் விலகி குடும்பத்தில் முன்னேற்றம் ஏற்படும்.

❖ அமாவாசை, முன்னோர்கள் இறந்த திதி இவைகளில் முன்னோர்களை வேண்டி தானம் செய்ய, நாம் செய்த அளவின் மடங்குகள் பணம் வரும்.

❖பூஜை அறையில் வழிபாடு முடிந்ததும் இடது நாசியில் சுவாசம் இருக்கும் போது பெண்கள் குங்குமம் இட்டுக் கொண்டால் மாங்கல்ய விருத்தி ஏற்படும்.

# சூரியனுக்கு செயற்கைகோள் அனுப்பிய தமிழக மன்னர்கள்?

# சூரியனை ஆராய்ந்த சித்தர்கள்

சந்திரனின் இருண்ட பிரதேசத்தை எட்டும் தொலைவில், சிறிய சரிவு ஏற்பட்டு சந்திராயன்–2 ஐந்து சதவீதம் தோல்வியடைந்தாலும், 95 சதவீதம் வெற்றிபெற்றது, இந்த நிகழ்வை ஒட்டுமொத்த இந்தியர்களும் பூரிப்புடன் வரவேற்றனர். இந்திய மக்களிடையே இருந்த ஒற்றுமையை சந்திராயன் –2 உலகிற்கு பறைசாற்றியுள்ளது.

இதுஒன்றும் தோல்வியல்ல...என்று உலக நாடுகளே இந்தியாவிற்கு சாதகமான கருத்தை சொல்லி வரும் இந்த வேளையில், நமது முன்னோர், சூரியனையே ஆராய்ச்சி செய்துள்ளனர். இதை பல்வேறு சித்தர்கள் தங்கள் பாடல்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். அவற்றைப்பற்றி பார்ப்போம்.

## சூரியனைப் பற்றி சித்தர்கள் ஆய்வு

நமது பூமி சூரிய மண்டலத்தில், பால் வெளியில் சுற்றிக்கொண்டு இருப்பதை அன்றே அகத்தியர் கூறுகின்றார்.

‘‘புவி தானும் ஜோதி வெளியின்
ஒளியில் மிதக்க மிதந்தே கண்டோம்
போகனும் புலிப்பாணியுஞ் சாட்சியே
பருதி குலத்து செம்மையான உயிர்
கோளிது புவியாமே’’

ஜோதி வெளி ஒளி என்பது MILKY WAY என்று பொருள்பட, பருதி குலம் என்பது SOLAR FAMILY என்றும் பொருள் ஆகிறது.

இனி சூரியனின் தன்மைகளைச் சித்தர்கள் விவரிப்பதை அவர்தம் பாடல்கள் வழி பார்ப்போம்.

சூரியனில் இருக்கும் வாயுக்களில் ஹைட் ரஜன், மற்றும் ஹீலியம் என்பது விஞ்ஞானிகளின் ஆய்வு. இதனை கோரக்கர் என்னும் சித்தர்,

‘‘பருதி தனில் பிரணமிலா நீரின்வாயு
நிறைய மீதக் காலே சோம்பல் பிராண
காரிரும்பென கண்டோமே’’

என்றார். பிராணமிலா நீர்வாயு என்பது ஹைட்ரஜன் வாயுவைக் குறிக்கும். இது சூரிய னின் எடையில் முக்கால் பகுதி எனவும், INERT எனப்படும் ஹீலியம், ஆக்சிஜன், கார்பன், இரும்பு என்றும் பொருள்படுகிறது.

இதையே இன்றைய NASA விஞ்ஞானிகள் உறுதிப்படுத்துகின்றனர்.

‘‘பருதி நிறை சூடுமலராம் புவியெப்ப
அஸ்டோத்திர நிறையாம் மங்கள வர்ண
மாய் புவி காட்ட, மண்டல நீலமே கரு’’

என்றார் புலிப்பாணி.

HOT PLASMA என்று சூரியனை அக்காலத் திலேயே சித்தர் வர்ணிக்கிறார். சூடுமலர் என்பதே இது. பூமியைப் போன்று நூற்றி யெட்டு பங்கு எடை மிகுத்தது என்றும் பேசுகின்றார்.

பூமியிலிருந்து சூரியனைப் பார்க்க மஞ்சளா கத் தெரிவது ஆகாயத்தில் ஏற்படும் SCATTER-ING EFFECT & BLUE OF THE SKY என்று பேசுவது அறிவியலையே வியக்கச் செய்யும் அளவுக்கு எந்த உபகரணமும் இன்றி வானவழி இதனை சித்தர்கள் உணர்ந்து, நமக்கு உரைத்தமை வியப் பளிக்கின்றது.

சூரியனின் மேற்புறத்து வெப்பத்தை போகர் பாட்டினால் உணரலாம்.

‘‘அக்கனியே அடுதி அளவு இருக்க
கண்டோமே’’

அடுதி என்பதனை ஐந்தாயிரத்து ஐந்நூறு சென்டிகிரேடு என்று நாடி எண்ணிக்கையின் அகராதி பேசுகிறது.



ஆக சூரியனின் மேற்பரப்பு வெப்பம் 5,500 டிகிரி செல்சியஸ் என்கிறார் சித்தர். வான்வெளி ஆய்வாளர்கள் 5,505 டிகிரி செல்சியஸ் என்று குறிப்பிடுகின்றனர்.

ஒவ்வொரு நொடியிலும் சூரியனின் ஹைட் ரஜன் வாயு சிதைவடைகிறது. இதன் அளவை சித்தர் தெளிவாக விவரிக்கின்றார்.

‘‘அமிலவாயு தாமுமழியுஞ் சிதைவைச்
செப்ப சட்டிச் சதமிரு பாந்தோகை
நிறையென சாற்ற இஃது தாம் மாத்திரை
பொழுதன்றோ’’

மாத்திரை என்றால் நொடி என்று பொருள். தோகை என்றால் பத்துலட்சம் அல்லது ஒரு மில்லியன் என்பது நாடியின் பொருள்.

ஒரு நொடியில் ஹைட்ரஜன் வாயுவை சிதைக்கும் FISION அளவு 620 மெட்ரிக் டன் மில்லியனில் என்று சித்தர் பேசுவது கணக்காளர் மத்தியில், ஆய்வாளர் மத்தியில் ஆச்சரியத்தைத் தோற்றுவிக்கிறது.

ஆம். ஆய்வாளர்கள் 620 மில்லியன் டன் பிசீ ஞுிஸிளிநிணிழி ஒரு நொடியில் திஹிஷிமிளிழி ஆகிறது என்பது மிகுந்த துல்லிய மான சித்தர் சொல் கணக்கைக் காட்டுகின்றது.

‘‘ஞாயிறான் ஓட்டமும் பால்வடிவமே
புவிக்கு மூபஞ்சமிரண்டு ஒளியாண்டே
பால்வழியும் பறக்குது பாரு,
விழியறியாயளிக் கற்றை ஒப்பிட கனியான
தொலை மாத்திரை யாகுமே’’

இப்பாடல் மிகுந்த நுட்பம் வாய்ந்தமை

www.aanmeegamalar.com



ஆன்மிகமலர் மெயில் புக்

ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com

காண்க. வழியறியா ஒளிக்கற்றை என்பது COSMIC MICROWAVE BACKROUND RADIATION என்பர். இதனொடு ஒப்பிடுகையில் கனியான தொலை என்பது 550 கி.மீட்டரைக் குறிக்கும்.

ஒரு நொடியில் இவ்வளவு தொலை பால்வழி பறக்கிறது. அதாவது MILKWAYநகர்கின்றது என்று தெளிவாகக் கூறுவது, விஞ்ஞானத்திற்கு சிறிது கூட மாற்றமில்லாது மெய்ஞானம் விளங்குகிறது என்பதனைக் காட்டுகின்றார் சித்தர்.

சூரியனிலிருந்து வரும் ஒளியானது பூமியை வந்தண்ட ஆகும் காலம் எவ்வளவு என்பதனை விளக்கும் பாடல் இதோ.

''பருதி கிரணம் பாய்ந்து வந்திம்
மண்ணையண்ட,யண்டத்தில் சஞ்சாரமாகுமே
பஞ்சரத மாத்திரை காலமே''

என்றார் போகர். அதாவது ஐந்நூறு வினாடிகள் என்கிறார் சித்தர். இதனை விஞ்ஞானிகள் 499 நொடிகள் என்கின்றனர்.

''பருதியுமோர் விண்மீனே கடுதிக்குரு
மீனே. பருதி குலத்து ஈரேழு கடுகித்தப்ப
விழுக்காடு குன்ற யீர்பிலா நிறையாமே.
சூடுமலர் உச்சியிறும் மையத்திலுஞ் சுற்றப்
பார்ப்பீரே''

இது ஒரு பழம் பாடல். இது சூரியனும் ஒரு நட்சத்திரம் தான் என்கின்றது. இதனை விஞ்ஞானிகள் G-TYPE MAIN-SEQUENCE STAR என்பர்.

ஆக சூரிய குடும்பத்தின் நிறையில் 99.86% சூரியனின் நிறை என்கிறது இப்பாடல். கடுதிக்குரு என்பது 0.14% என்பதாகும்.

''மதிப்பிலடங்கா உலோக முடைத்தான்
கதிரோன் தங்கமுமுண்டு ஒளியுலோக
முமுண்டு சாற்றுவோம் இவையே
அணுச்சக்தி தமை யெழுப்பக் கரு''

என்று பாம்பாட்டி சித்தர். எளிமையாகக் கூறுகின்றார். யுரேனியம், தங்கம் போன்ற விலையுயர்ந்த உலோகங்கள் சூரியனில் நிறைய இருப்பதினால், NUCLEAR REACTION ஆங்கு எளிதில் நடைபெறுகின்றது என்கிறார்.

இதனாலேயே மிகவும் ஆபத்து வாய்ந்த கதிர்கள் சூரியனிலிருந்து வெளிவருகின்றன. அவை பூமியை வந்தடைகையில்,

''கருணை மிகுந்த கடிவாளமிட்டான்
சங்கரன் வடிவாய் பற்பல வடி
கட்டிகளை நிறுத்தி நஞ்சைத்தடுக்க
நன்மையே நன்றான நற்கதிரே
மண்ணடைய வைத்தனனே பைத்தமா
நிதியே''

என்ற கொங்கணரின் பாடல் நம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது. அண்டத்தில் ஏகப்பட்ட LAYER கள் உண்டு. COSMIC LAYER, OZONE LAYER, APPLETION LAYER என்று பற்பல உருவாக்கி, தீமை பயக்கும் கொடிய வெப்பக் கதிர்களை வடிகட்டி நன்மை மட்டும் தரும் கிரணங்களை நமது பூமிக்கு வந்தடைய கருணையே வடிவான கடவுள் வைத்த மாநிதி அனுகிரத்தனன் என்றார் சித்தர்.

''பகுதியானொலியின் ஏகத்துஞ்
சற்றேகுன்ற யளி வருமண்டத்தே நம்புவீர்''

என்ற கொங்கணர் வரியிலிருந்து, சூரியனின் புறத்தே ஏற்படும் ஒளி வெள்ளத்தில். 0.8சதவிகிதமே பூமியை வந்து அடைந்து நம்மை வாழ்விக் கின்றது என்றால், சூரியக் கோளின் தன்மையைக் கண்டு வியப்பு மேலிடு கின்ற தான்றோ!!!

அகத்தியரின் பாடலில்,

''ஆதித்யனவன்ஆற்றலனைத்துமாகாது
அதிலொரு காலே ஒளிக்குதவ,
மீதமது சூடேறி தாமிருப்ப, அணுவில்
மேலாம் முப்பானேடு கோடியளவே
மாத்திரையில்சலாட நொடியில் காட்டும்
கடுசி துகளே''

சூரியனின் ஆற்றல் அனைத்தும் இனியும் வெளிவரவில்லை. கால்பகுதி சூரியனில்தான் DIFFUSION,NUCLEAR REACTION நடை பெறுகின்றது. இதனால் ஏற்படும் வெப்பம், மற்ற இடங்களை வெப்பமடையச் செய்கிறது.

புரோட்டான் புரோட்டான் சங்கலி 38 கோடி முறை ஒவ்வொரு நொடியிலும் நிகழ்கின்றது. 3.7ஜ் 1038 புரோட்டான் ALPHA PARTICLE ஆக உருவெடுக்கின்றது எனப்பேசுகிறார்.

''ஆதித்யனின் அபரிமித வெப்பமது
அளவாய் சாற்ற கேளீர் ஈர்ப்பிலா
யெடையான சக்தியளி மாற்றமது
தகடேசான நிறையாம் திறனே
கசடானதா மது மாத்திரை பொழுதெனப்
பகரு''

அதாவது சூரியனின் வெப்ப சக்தி வெளி வருதல் 4.3 மில்லியன் மெட்ரிக் டன் (தகடேசான) ENERGY WATT. 9.000 X 1011 MEGATONS TNT PER SECOND (கசடானதாம் 3.9 X 1026 W) இவ்வளவு துல்லியமான கணிதத்தை அக் காலத்திலேயே சித்தர்கள் கூறியதை விஞ்ஞானிகள் உண்மை என ஆய்ந்து கூறுவது நமது சித்தர்களின் வான்வெளி புலமையைப் பறைசாற்றுகிறதன்றோ?

இஃதே போல் தெய்வத் தமிழ் திருநாட்டில் உள்ள கீழ் சூரிய மூலை சிவாலயத்தில் இருந்து தாம் சூரியனுக்கு தேவையான கதிர்வலைகள் அனுப்பப் படுகின்றன, அதே போல் சூரியனிடமிருந்து வரும் ஏழு கதிர்களை அவரவருக்கான கர்ம பரிபாலன நியதிப் படி பயன்படுத்தி இரவு பகல் காலங் வேறுபாட்டை கடக்கும் மார்கமும் நன்கு விளக்கப் பட்டுள்ளன.

விஞ்ஞான பூர்வமாக சூரியனிடமிருந்து ஏழு கதிர்கள் தாம் பூமியை அடைகின்றன என்கிறனர்.

இதை தான் ஏழு குதிரையில் சூரிய பகவான் பவனி வருவதாய் அன்ம நுணுக்கமாய் ஆன்மீகப் பூர்வமாய் விளக்கப்பட்டுள்ளது.... என்பதும் குறிப்பிடத்தக்கது.

சூரியனைப்பற்றியே நமது முன்னோர் இவ் வளவு துல்லியமாக ஆராய்ந்து வைத்துள்ளனர். இன்னும் பொருள் புரியாமல் பல ஆயிரக்கணக்கான சித்தர் பாடல்களை ஆராய்ந்தால் ஒட்டு மொத்த உலக இயக்கத்தையும் எளிமையாக அறிந்து கொள்ள முடியும் என்று தமிழ் அறிஞர்கள் கூறுகின்றனர்.

**மதுரை மீனாட்சியம்மன் கோயில் கட்டடக் கலையில் விண்வெளிக்கு செல்லுவது போன்ற சிற்பங்களை ஆய்வு செய்த வெளிநாட்டினர், ஒருநிமிடம் அதிர்ந்தே உள்ளனர்.**

**தமிழக மன்னர்கள் வீரத்தில் மட்டுமல்ல, விஞ்ஞானத்திலும் மிகப்பெரிய நிலையை எட்டியவர்கள் என்று புகழ்ந்துள்ளனர்.**

**ஒருபடி மேலே சென்று சூரியனை ஆய்வு செய்ய தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் சூரியனுக்கே விண்கலன்களை அனுப்பியிருக்கலாம், அந்த விண்கலன்கள் இன்றும் சூரியனை நோக்கி பயணித்துக் கொண்டிருக்க வாய்ப்பிருப்பதாக** பெருமையுடன் கூறியுள்ளனர்.

நமது முன்னோர் அறிவியலை ஆராய்ந்தாலே பல்வேறு விஞ்ஞான புதிர்களுக்கு எளிமையாக விளக்கம் கிடைக்கும்.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# பைத்தியகாரன்

■ ஓஷோ

ஒரு பைத்தியகாரன் மீது கருணை கொண்ட சீடன், அவரை தனது மடலாயத்து குருவிடம் அழைத்து சென்றான்.

குரு சொன்னார்,

"அவரை அப்படி ஓரமா மூலையில் உட்கார விடுங்கள்.

உணவை, நீரை அருகில் வையுங்கள்

ஆனால் உண்ணும் படி கூறவும் வேண்டாம்.

பசித்தால் அவரே எடுத்து சாப்பிடுவார். அவருக்கு எந்த உதவியும் செய்ய வேண்டாம், நீங்கள் யாரும் கண்டு கொள்ளவும் வேண்டாம்." என்றார்.

அவர் கத்துவார், கற்களை வீசுவார்.

ஆனால் அவரை யாரும் அங்கு கண்டு கொள்ளவில்லை.

சீடர்கள் அவரவர் வேலைகளை பார்த்தனர்.

அந்த பைத்தியகாரருக்கு எதிர்வினையாற்றுவது இல்லாது போனது. எதிர்ப்பவர் இல்லாத தால்!

நாட்கள் நகர்ந்தன,

ஒரு நாள் அமைதியாக குரு முன் வந்த பைத்திய காரன்,

"எனக்கும் தியானம் சொல்லி தருவீர்களா..?" என்று கேட்டான்.

இது இன்றும் திபெத்திய புத்தமடலாயங்களில் நடக்கும் சிகிச்சை முறை.

எதிர்வினையாற்ற யாரும் இல்லை என்றால் அவர் அமையாகிவிடுகிறார் என்கிறார்கள் திபெத்திய லாமாக்கள்.

உண்மைதானே மற்றவர் பார்க்கவில்லை என்றால் பைத்தியகாரதனங்கள் வளர்ந்து கொண்டே போகாது.







இலவச இதழ்

ஆன்மிகமலர் மெயில் புக்










உங்களது மொபைல் போனில் படிக்க....

GET IT ON Google Play

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
ஆன்மிகமலர் இ-புத்தகம் படிக்கலாம்.

# நிம்மதியற்ற ஆத்மாக்களுக்கு நன்மை செய்யும் மோட்ச தீப வழிபாடு



மோட்ச தீப வழிபாடு பற்றி உணர்வதற்கு முன்னர் நாம் தீப வழிபாடு பற்றி அறியவேண்டியது அவசியம். பொதுவாகவே தீப வழிபாடு மிக மிக உயர்ந்தது. எந்த கோயிலுக்கு சென்றாலும் பூவும், தீபமேற்ற நெய் அல்லது எண்ணெய் வாங்கி சென்று வழிபடுங்கள். தேங்காய், பழம் வைத்து வழிபாடு செய்வதை விட, பூக்களும், தீபமும் சால சிறந்தது. பொதுவாகவே தீப வழிபாடு என்பது மிக மிக உயர்ந்த வழிபாடு ஆகும். விளக்கேற்றி வழிபாடு செய்தால்

நினைத்த காரியம் நடக்கும்

குடும்ப ஒற்றுமை ஓங்கும்

புத்திரதோஷம் நீங்கும்

சகல நன்மைகளும், ஐஸ்வர்யமும் பெருகும்.

அதே போல், விளக்கேற்றும் திசை, எண்ணையின் பலன்கள் என்று பல செய்திகள் உண்டு (ஆன்மிகமலர்.காமில் தீபம் ஏற்றவேண்டிய திசைகள் எண்ணெய்யின் பலன்களை விளக்கமாக தந்துள்ளோம்), சாதாரண தீபம் தானே என்று எண்ணாதீர்கள். தீபங்கள் ஏற்றும் போது, அந்த இடத்தில உள்ள இருள் நீங்கி, ஒளி பரவுகின்றது. அதே போல் தீபம் ஏற்ற ஏற்ற நம் அக இருள் நீங்கி, அக ஒளி பெருகும். மேலும் தீப வழிபாடு என்பது "பஞ்ச பூத" வழிபாட்டின் தத்துவமாகும். தீப வழிபாட்டில் நாம் நமக்காக வேண்டுவதை விட, மற்றவர்களுக்காக வேண்டுவது சால சிறந்தது.

தீபமேற்றிய உடன் நமக்கு என்ன தோன்றுகின்றது. மகிழ்ச்சி தானே..

தீபமேற்றுவதன் தாத்பரியமே நாம் மகிழ்வோடு வாழ்தல் என்பதற்காகத் தான். தீபமேற்றியவுடன் அந்த இடத்தில் உள்ள இருள் விலகி, ஒளி பெறுகின்றது. இது புறத்தில் நடைபெறும் நிகழ்வு. நீங்கள் இது போன்று தீபமேற்றி பிரார்த்தனை செய்ய செய்ய, அந்த புற நிகழ்வு, உங்கள் அகத்தில் நிகழ்வும். மாசற்ற ஜோதி மனதில் ஒளிர்ந்து, மலர்ந்த மலரை நாம் நம்முள் உணரலாம். நாம் ஒவ்வொருவரும் எத்துணையோ விதமான துன்பங்களை அனுபவித்து வருகின்றோம். சொல்லொணா துயரில் இருப்பவர்கள் தினமும் அகல் விளக்கில் பிரம்ம முகூர்த்தத்தில் விளக்கேற்றி சிறிய அளவில் பிரார்த்தனை செய்து வாருங்கள். சுமார் மூன்று மாதங்களுக்கு உள்ளாக நீங்கள் மாற்றம் பெறுவது உறுதி.

இந்த உலகம் எதனால் இயங்குகின்றது? சூரியனால் தான். சூரியன் இல்லையென்றால் நம் கதி அதோகதி தான். ஆதியில் நம் வழிபாடாக இருந்ததும் சூரிய வழி பாடு தான். ஞாயிற்றுக் கிழமை வாரத்தின் முதல் நாள், சூரியனை வழிபட்டு நம் நாட்களை தொடங்க வேண்டிய நாள். ஆனால் மாறாக அன்று தான் நாம் கேளிக்கை, கூத்து என்று திண்டாடி வருகின்றோம். ஆதி வழிபாட்டை மறந்து விட்டோம். தற்போது ஞாயிற்றுக் கிழமை விடுமுறை தினமாக நம் கையில் சீரழிந்து வருகின்றது. இதற்கு மாற்றாக நாம் என்ன செய்ய முடியும்? ஞாயிற்றுக் கிழமை அன்றாவது விடியல் கண்டு சூரியன் தரிசனம் பெறுங்கள், சூரியக் குளியல் போடுங்கள். சரி வாருங்கள்..விளக்கின் மூலம் விளக்கம் பெறுவோம்.

விளக்கு என்றால் என்ன?

தெளிவு பெறு..

தெளிவு எப்போது பெற முடியும்?

அகமோ, புறமோ இருள் அகற்றினால் தெளிவு பெறலாம். விளக்கு இருள் அகற்றும் வேலையைத் தான் செய்கின்றது. ஆரம்ப காலத்தில் களிமண்ணால் விளக்குகள் பயன்பாட்டில் இருந்தது. இன்று பல உலோகங்களில் பல விதங்களில், வடிவங்களில் கிடைக்கின்றது. கோயிலில் விளக்கேற்ற செல்லும் போது கண்டிப்பாக களிமண்ணால் செய்யப்பட்ட விளக்குகளை பயன்படுத்துங்கள். பொதுவாக திருவிளக்கின் தத்துவத்தின்படி,

நெய் .................... நாதம் என்ற ஒலி தத்துவம்

திரி ...................... பிந்து என்ற ஒளி தத்துவம்

சுடர் ..................... திருமகள்

பிழம்பு ................. கலைமகள்

தீ ......................... சக்தி

என ஐந்து இறைமகாசக்திகள் உள்ளடங்கி உள்ளது. அகல் விளக்கேற்றி வழிபடுவது பஞ்ச பூத வழிபாடாகும். நாம் மோட்ச தீபத்தில் களிமண்ணால் ஆன பெரிய அகல் விளக்கில் விளக்கேற்றி வழிபாடு செய்கின்றோம். பஞ்ச பூத வழிபாடும், முன்னோர்களின் வழிபாடும் என ஒரே கல்லில் இரண்டு மாங்காய் கிடைப்பதைப் போன்றதாகி விடும். அதே போல் விளக்கேற்ற உகந்த நேரம் நாம் ஏற்கனவே சொல்லியது போன்று பிரம்ம முஹூர்த்தம் என சொல்லப்படும் அதிகாலை 4:30 மணிமுதல் 6:30 மணி வரை தான். அதற்குப் பின்னரும் விளக்கேற்றலாம். தவறில்லை. பலன்கள் சற்று குறைவாக இருக்கும். அவ்வளவே. பயன் படுத்தப்படும் உலோக விளக்குகளுக்கென தனித்தனி பலன்கள் உண்டு.

## உலோக விளக்கிற்கான பலன்கள்

வெண்கல விளக்கு.................... பட்சி தோஷங்கள் நீக்கும்

பித்தளை விளக்கு .................... சண்டை சச்சரவு நீங்கும்

செப்பு விளக்கு ......................... அமைதி தரும்

வெள்ளி விளக்கு....................... பூரணத்துவம் தரும்

தங்க விளக்கு .......................... ஆயுள் விருத்தி

நவரத்தின ஆபரண விளக்கு..... நவரத்தின தோஷம் நீங்கும்

என்பது ஐதீகம்.

உலோக விளக்குகளுக்கு என்று சளைக்காது இருப்பது மண் அகல்

விளக்குகள். வலம்புரி சங்கு விளக்கு, பச்சை மண் அகல் விளக்கு, சுட்ட அகல் விளக்கு, பனம்பழ குறுக்கு வெட்டு அகல்விளக்கு, விசிறித்தட்டு அகல் விளக்கு, பாதாளக்குழி அகல், தூங்கா(தூண்ட) விளக்கு, பலரூப அகல் விளக்கு என பலவகையான அகல் விளக்குகள் உண்டு. இதே போல் விளக்கேற்றும் எண்ணெயிலும் பல செய்திகள் உண்டு. சரி. மோட்ச தீப வழிபாடு பற்றி சிறிது உணர்வோம்.

உடலை விட்டுப் பிரிந்த ஆத்மா மறுபிறவி இல்லாமல் மோட்சம் அடைவதற்காக திருக் கோயில்களில் மோட்ச தீபம் ஏற்றுவது ஐதீகம். குறிப்பாக அப்பர் சுவாமிகளுக்கு சிவபெருமான் கயிலைக் காட்சி அருளிய திருவையாறு ஐயாறப்பர் கோயிலில் மோட்ச தீபம் ஏற்றுவது மிகவும் சிறப்பு என்றும் கூறுகின்றார்கள். இந்த தீபத்தை மருத்துவ துறையில் இருப்பவர்கள், கோவிலில் ஏற்ற வேண்டும். நம்மைப் பொறுத்த வரையில் பதிவின் ஆரம்பத்திலேயே வழிபாட்டில் மிக மிக உயர்ந்த வழிபாடு என்று இந்த வழி பாட்டை சொல்லி தான் ஆரம்பித்தோம். நாம் யாருக்காக பிரார்த்திக்கின்றோம்? வழிபாடு செய்கின்றோம்?

நமக்கு, நம் குடும்பத்திற்கு, நம் உற்றார் உறவினர்களுக்கு என்று அடுத்த தான் செல் கின்றோம். கண்ணனுக்கு தெரிந்து உடல் பெற்று வாழும் உயிர்களுக்கு வழி பாடு/ பிரார்த்தனை/ அன்னசேவை என செய்கின்றோம். ஆனால் கண்ணுக்கு தெரியாமல் உடல் இன்றி வெறும் ஆத்மா மட்டும் வாழுகின்றார்களே..அவர்களுக்கு யார் உணவிடுவது? பிரார்த்திப்பது? என்பது போன்ற பல கேள்விகளுக்கு விடையாக இருப்பதே இந்த மோட்ச தீபம் வழிபாடு ஆகும். அப்படியானால் இது மிகவும் உயர்ந்த வழிபாடு தானே? ஐயம் ஏதும் இல்லையே... இது தான் மோட்ச தீப வழிபாட்டின் சூட்சுமம் ஆகும்.

உடல் அற்ற உயிர்களுக்காக, நம் முன்னோர் களுக்காக, அவர்கள் அடுத்த நிலையில் முன்னேறும் பொருட்டு வேண்டுவதே இந்த வழிபாட்டின் சூட்சுமம் ஆகும். யோசித்துப் பாருங்கள், நாம் எப்படி இங்கே பிறந்தோம், நம் பெற்றோரால் தானே. அவர்கள்...நம் தாத்தா, பாட்டி போன்ற முன்னோர்களால் தான். இப் போது அவர்கள் இங்கே நம்முடன் இல்லை. ஆனால் அவர்களின் ஆன்மா இந்த நிலவுலகில் இருக்கலாம், அல்லது வேறேனும் உலகில் இருக்கலாம். இது போன்ற உடலேனும் சட்டை இல்லாத உயிர்களுக்கு உணவிட்டு, அவர்களை திருப்தி படுத்தினால் தான் நம் வாழ்க்கை மேன்மையுறும். இதற்காகத் தான் தர்ப்பணம், தானம், திலா ஹோமம் என உண்டு. அதிலும் குறிப்பாக கருப்பு எள்ளை பயன்படுத்துவோம். இந்த கருப்பு எள் தான் முன்னோர்களுக்கு உணவாக கொடுக்கப்படும் என்பது ஐதீகம். அதனால் தான் மோட்ச தீபத்திலும் கருப்பு எள் சேர்க்கின்றோம்.

இந்த மோட்ச தீப பூஜைக்கு என்று பச்சரிசி, பருத்திக்கொட்டை, நவ தானியங்கள்,பச்சைக் கற்பூரம், கல் உப்பு, மிளகு, வெண்கடுகு என்று சுமார் 15 பொருட்களுக்கு மேல் தேவைப்படும். இவற்றை நன்கு நீரில் கழுவி, சூரிய ஒளியில் காய வைத்து எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

மோட்ச தீபத்திற்கு திரி தயார் செய்ய வேண்டும்.. இந்த வழிபாட்டிற்கு கூடவே உதவி செய்ய ஐந்தாறு நபர்கள் தேவை. அப்பொழுது தான் இந்த படிநிலைகளை நாம் செய்ய முடியும். ஒவ்வொரு வழிபாட்டிற்கும் அப்படித் தான். நாம் வேண்டுவதெல்லாம், இது போன்ற எந்த பூசை என்று கேள்விப்பட்டாலும் முடிந்தால் பொருளுதவி செய்யுங்கள். இல்லையென்றால் உடலுதவி செய்யுங்கள்.

மோட்ச தீப திரி தயார் செய்ததும், ஒரு மனைப்பலகையில் வாழை இலை போட்டு, 21 அகல் மடக்குகளை வைக்க வேண்டும். பின்னர் அவற்றின் மேல் எள் வைக்க வேண்டும். அடுத்த மடக்கை மேல் வைத்து நெய் ஊற்றி, திரிகளை வைக்க வேண்டும். இந்த பூசை செய்ய உகந்த நேரம் சரியாக அமாவாசை திதி உள்ள மாலை நேரம் மட்டுமே. அனைத்தும் தயார் என்றால் மூத்தோனை வணங்கியும், குருமார்களை வணங்கியும் தீபம் ஏற்ற வேண்டும். இவை அனைத்தும் வலமிருந்து இடமாக தான் செய்ய வேண்டும். 21 தீபங்களை ஏற்றி முடித்ததும், 108 முறை மோட்ச தீப மந்திர ஜெபம் செய்ய வேண்டும்.

அடுத்து மீண்டும் 108 முறை பீஜமந்திரம் உச் சாடனம் செய்ய வேண்டும். அடுத்து தீபங்களின் முன்னே வாழையிலை போட்டு மலர் தூவி

இறைவா! இந்த பூஜா பலனை நிம்மதி இன்றி தவிக்கும் ஆத்மாக்களுக்கு சமர்ப்பணம் செய்கின்றோம் என்று கூறி முழுமை செய்ய வேண்டும். அனைவரும் மலர் தூவி கை, கால் அலம்பி விட்டு அங்கே கொடுக்கும் பிரசாதம் சாப்பிட்டுவிட்டு தான் வீட்டிற்கு செல்ல வேண்டும்.

மறுநாள் காலை பூஜை பொருட்களை அப்படியே எடுத்துக் கொண்டு சென்று ஓடும் நீர்நிலைகளில் கரைத்து விட வேண்டும்.

பித்ரு பூஜை, மோக்ஷ தீப வழிபாடு இவைகள் பாவ ஆத்மாக்களுக்கு பெருமளவு உதவி செய்யும். பல்வேறு புண்ணியங்களை செய்து, சிறிய அளவில் பாவத்தோடு உடலை விட்ட ஆத்மாக்களுக்கு அந்த ஆத்மாவின் சார்பாக செய்யப்படும் பூஜைகளும், புண்ணிய காரியங்களும் நல்ல பலனைத் தரும்.

இந்த மோட்ச தீப வழிபாடானது மாதம் தோறும் அமாவாசை அன்று கூடுவாஞ்சேரி மாமரத்து விநாயகர் ஆலயத்தில் மாலை 5 மணி முதல் நடைபெறும். பூசைக்கு வருபவர்கள் கட்டாயம் தங்களால் முடிந்த அளவில் கருப்பு எள்ளும், நெய்யும் வாங்கிக்கொண்டு வரவும்.

நம் தேடல் உள்ள தேனீக்கள் குழுவின் சார்பாக இந்த வழிபாடானது 2017 ஆடி மாதம் முதல் செய்து வருகின்றோம். பூசையில் கலந்து கொள்பவர்கள் வீட்டில் சுப நிகழ்வுகள் படிப்படியாக நடைபெற்று வருகின்றது என்பதை நாம் கண்கூடாக பார்த்து வருகின்றோம்.

இந்த மோட்ச தீபத்தைப் பற்றி மேலும் விவரங்களை தெரிந்து கொள்ள

– ரா.ராகேஷ், போன்: 7904612352
தேடல் உள்ள தேனீக்களாய் குழு,
கூடுவாஞ்சேரி

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# மனிதர்களை சோதிக்கும் பூத கணங்கள்

பூத கணங்கள் என கேள்விப்பட்டிருப் பீர்கள். பழமையான கோவில் கோபுரங்களில் நான்கு திசைகளிலும் வீற்றிருக்கும் இவை, சிவனுக்கு சேவை செய்ய பிறப்பிக்கப்பட்டவை. இவைகள் நம் வாழ்விலும் சில இன்ப துன்பங்களை ஏற்படுத்த வல்லவை. இதை பற்றி பழம்பெரும் கிரந்தங்களில் பல குறிப்புகள் உண்டு.

தற்காலத்திலும் அவை பொருந்தும். இந்த முப்பது மூன்று பூத கணங்களும் நமக்கு எப்படிப் பட்ட சோதனைகளை தரும் என பார்ப்போம்.

காம பூதம்: பெயரே விளக்கம் தரும். ஒருவரை காமத்தில் மோகம் கொண்டு அலைய செய்து வீணாக்கும்.

ராட்சச பூதம்: மனிதனை ராட்சச குணம் கொள்ள செய்யும்.

வேதாள பூதம்: அடுத்தவரை மதியதிருத்தல், தன்னை தானே அளித்து கொள்ளல்.

கிரண பூதம்: மதுவுக்கு அடிமையாக்கும், துற சகவாசம் ஏற்படுத்தும்.

ஷஒஸ்மாண்ட பூதம்: நற் சகவாசம், ஆன்மீக பிரியம் ஏற்படுத்தும்.

யக்ஷ பூதம்: தற்கொலைக்கு தூண்டும்.

பைசாச பூதம்: தெய்வத்தை நிந்திக்க செய்யும்

சித்த பூதம் : ஞானமளிக்கும்

குரவ பூதம் : பிறருக்கு ஞானத்தை போதிக்க செய்யும்.

கந்தர்வ பூதம் : அழகிய தேகத்தை தரும்.

அசுர பூதம் : பிராமண துவேஷம், ஞானிகளை நிந்தித்தல், மாமிச பிரியம் கொள்ள செய்யும்.

முனி பூதம் : சாஸ்திரத்தில் நாட்டம் கொள்ள செய்யும்.

விருத்த பூதம் : உடல் கோணலை கொடுக்கும்.

தேவ பூதம் : தேவர்கள், சித்தர்கள், மகான்கள், பெரியோர்களிடத்தில் நாட்டம் கொள்ள செய்யும்.

வருண பூதம் : நீர் நிறைந்த பிரதேசத்தில் வாசம் கொள்ள செய்யும்.

அர்த்தபிதா பூதம் : சோம்பலை கொடுக்கும்.

ஈசுர பூதம் : சரித்திரத்தில் நாட்டம் கொள்ளச்செய்யும்.

வித்தியுன்மாலி பூதம் : பயம் கொள்ள செய்யும்.

நிகட பூதம் : பெண்கள் மீது நாட்டம்.

மணிவரை பூதம் : எவற்றிற்கும் பயமில்லா தன்மையையும், அதீத கோபத்தையும் கொடுக்கும்.

குபேர பூதம் : தன விருத்தி.

விருபாச பூதம் : தேகத்தில் வலிமையுண்டாக்கும்.

சக பூதம் : பித்தம், சதா பயம்.

சாகோர்த்த பூதம் : நிர்வாண நிலையில் தெருவெங்கும் ஓட்டம், ஞான நிலை.

யாகசேனா பூதம் : பெருமை, தற்புகழ்ச்சி.

நிஸ்ததேச: பெண்களை இம்சித்து புசித்தல், குரோத எண்ணம் கொண்டு வரும்.

இந்திர பூதம் : குறையாத தனத்தை தரும்.

நாக பூதம் : மயான வாசம், மலை வாசம்.

விசாக பூதம் : எல்லோரையும் எப்பொழுதும் குறை கூறி கொண்டிருத்தல்.

கசுமால பூதம் : அதீத தீனி எண்ணம்.

அசாத்திய பூதம் : வலிய சென்று மற்றவரை சண்டைக்கு இழுத்தல்.

பித்த பூதம் : மன சுழற்சி, பைத்திய நிலை.

ப்ரம்ம ராக்ஷச பூதம் : தேவர்கள், முனிகள், பிராமணர்களிடம் விரோதம்.

மேற்கண்டவற்றை நீங்கள் ஆழ்ந்து நோக்கினால் நம்மிடம், நாம் பார்க்கும், பலரிடம் மேற்கண்ட பூதங்களில் ஏதாவது ஒன்று இருக்கும்.



# சம்பளத்தின் ஒருபகுதியை குருவாயூரப்பனுக்கு தரும் சமையல் கலைஞர்கள்

குருவாயூரில் உள்ள பெரும்பலச்சோரி எனும் இடத்தில் நடைபெறும் விழாவிற்கு, சமையல் வேலை செய்வதற்காக சென்றிருந்தனர், நான்கு முதியவர்கள்.

அவர்களை பார்த்ததும், ஏளனமாக சிரித்த நிகழ்ச்சி பொறுப்பாளர், "வயதான நீங்கள் தான் சமையல்காரர்களா... நாளை, ஆயிரம் கலம் சாதம், குழம்பு, கூட்டு, பொறியல் என எல்லாம் செய்யணுமே... வயதான உங்களால் முடியுமா... இத்தனை வயதாகியும் பணத்தின் மேல் உள்ள ஆசையால், வேலை செய்ய வந்திருக்கீங்களே..." என்றார், ஆணவத்தோடு!

கிருஷ்ண பக்தர்களான அம்முதியவர்களோ, பள்ளிவேட்டை உற்சவத்தின் போது, குருவாயூரப்பன் சன்னிதியில் நின்று, 'குருவாயூரப்பா... உன் அருளை அடைய முடியாத எங்களை, இக்கர்வம் பிடித்தவர் முன், காப்பாற்று...' என்று பிரார்த்தனை செய்து, தங்கள் இருப்பிடத்தை அடைந்தனர்.



மறுநாள் அதிகாலை, 3:00 மணிக்கு, நால்வரும், குளத்திற்கு நீராட சென்றனர். அப்போது, அவர்களுக்கு பழக்கமான நாகோரி எனும் சிறுவன், பல் விளக்குவதைப் பார்த்து, ஆச்சரியமடைந்து, 'நாகோரி... நீ எப்ப வந்த...' எனக் கேட்டனர்.

அச்சிறுவனோ, 'நீங்க இங்க சமையல் வேலைக்கு வந்திருப்பது, நேத்து ராத்திரி தான் தெரிஞ்சது; வயசான உங்களுக்கு உதவியாக இருக்கலாமேன்னு தான் வந்தேன்...' என்றான்.

அம்முதிய அடியவர்களுக்கு சற்று திருப்தியாக இருந்தது; அனைவரும் நீராடி திரும்பினர்.

சமையல் வேலை துவங்கியது; நால்வரும், ஏதோ செய்தனரே தவிர, பெரும்பாலான வேலைகளை நாகோரியே, 'பரபர'வென செய்து முடித்தான். காலை, 9:00 மணிக்குள், இறைவனுக்கு படைக்க வேண்டிய திருவமுது, பால் பாயசம், தேங்காய் பாயசம் மற்றும் கறி வகைகள் என, எல்லாவற்றையும் செய்து முடித்தான்.

அனைவரும் வியந்தனர்; எகத்தாளம் பேசி, அவமானப்படுத்திய நிகழ்ச்சிப் பொறுப்பாளர், முதியவர்களை பாராட்டி, அவர்களுக்கு ஏராளமான வெகுமதியும் அளித்தார்.

அப்போது, 'நான் அவசரமாக குருவாயூர் போக வேண்டும்...' என்று கூறி, உணவுக்கு முன் புறப்பட்டான் சிறுவன் நாகோரி.

முதியவர்கள் நால்வரும் உணவை முடித்து, குருவாயூர் சென்றனர். அவர்களுக்கு நாகோரியின் நினைப்பே வரவில்லை.

குருவாயூரில் தரிசனத்தை முடித்து, இருப்பிடம் திரும்பியவர்களின் கனவில், குருவாயூரப்பன் காட்சி கொடுத்து, 'அடியவர்களே... நாகோரியாக வந்து, உங்களுக்கு சமையலில் உதவி செய்த எனக்கு கூலி தராமல் வந்துவிட்டீர்களே... உழைப்பை வாங்கி, ஊதியம் தராமல் இருக்கலாமா...' என்றார்.

அடியார்கள் திடுக்கிட்டு, 'குருவாயூரப்பா... எங்களை காப்பாற்றுவதற்காக, சமையல்காரனாக வந்த உன் கருணையை என்னவென்று சொல்வது...' என, கண்ணீர் மல்க துதித்தனர்.

இதன் காரணமாகவே, ஆயிரம் கலம் நைவேத்யம் செய்து, குருவாயூரப்பனுக்கு படைக்கும் திருநாளில், சமையல்காரர்கள் தங்களுக்கு கிடைக்கும் கூலியில் ஒரு பங்கை, பகவானுக்கு சமர்ப்பணம் செய்யும் வழக்கம் வந்தது.

– நன்றி: வெங்கட் ஸ்ரீனிவாஸன்.

## தமிழகக்கோயில் பற்றி நியூயார்க் டைம்ஸ்

நியூயார்க் டைம்ஸ் பத்திரிக்கை வெளியிட்ட உலகில் ஒருமுறையாவது பார்க்கவேண்டிய இடங்களின் பட்டியலில் தமிழகம் இடம் பெற்றுள்ளது. அதிலும் மதுரை மீனாட்சியம் கோயிலும், தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலும் இடம்பெற்றிருப்பது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.



அதுவும் இந்தியா சார்பில் இடம் பெற்றுள்ள ஒரே மாநிலம் தமிழ்நாடுதான்! தமிழ்நாடு 24வது இடத்தை பிடித்ததற்கு காரணம், இங்குள்ள கலாச்சாரம் மற்றும் இங்குள்ள மக்களின் பண்பாட்டை வளர்க்கும் கட்டட அமைப்புகளும் தானாம்.

உலக அரங்கில் இந்திய கலாச்சாரம் பெரிதாக பேசப்படும்போது, அதில் தமிழக கலாச்சாரத்திற்கு கிடைத்திருக்கும் இந்த அடையாளம் மறுக்க முடியாததுதான். தமிழகத்தில் உள்ள கோவில்கள் பழைமை வாய்ந்தததாகவும், கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்கும். மதுரை மீனாட்சியம்மன் கோவில், தஞ்சை பிரகதீஸ்வரர் கோவில், செட்டிநாடு பகுதியில் உள்ள 18ம் நூற்றாண்டின் சிறந்த கட்டடங்கள் என பல பெருமைகளை தாங்கி நிற்கும் தமிழ்நாட்டை, இந்த வருடம் கட்டாயம் பார்க்க வேண்டும் என நியூயார்க் டைம்ஸ் கூறியுள்ளது.

இதில் உலகின் முன்னணி வரிசையில் உள்ள வாஷிங்டன், பார்சிலோனா, வியட்நாம், கான்சாய், சிட்னி, க்ரீஸ் போன்ற இடங்கள் தமிழகத்தை விட பின்னால் உள்ளது

# திருவம்பலச் சக்கர வழிபாடு

## தீய சக்திகளை விரட்டி நிரந்தர செல்வ செழிப்பை தரும்!




சிவனை ஆராதிப்பவர்கள் சிவத்தை அடைய பல்வேறு வழிமுறைகள் இருந்தாலும் திருவம்பலச் சக்கர வழிபாடு மிகவும் பயன் உள்ளதாக இருக்கும் என்பதால் சிவ பக்தர்கள் இந்த திருவம்பலச் சக்கர வழிபாட்டை மேற்கொள்கின்றனர். பஞ்சாக்கர எழுத்துக்கள் மனித உடலை ஆட்கொண்டிருப்பதாகவும், இதனை உணர்ந்து தெளிந்து திருவம்பலச்சக்கரத்தினை பூசிப்பவர்களுக்கு அழியாத உடல் கிடைக்கு மென்கிறார் திருமூலர்.

"ஆகின்ற சக்கரத்து உள்ளே
எழுத்து ஐந்து ஐந்தும்
பாகு ஒன்றி நின்ற பதங்களில் வர்த்திருக்கும்
ஆகின்ற ஐம்பத்தி ஒரெழுத்து உள்நிற்கப்
பாகு ஒன்றி நிற்கும் பராபரன் தானே"

– திருமந்திரம்

திருவம்பலச் சக்கரத்தின் மையத்தில் உள்ள இருபத்தியைந்து அறைகளினுள் இந்த ஐம்பத்தியோரு பஞ்சாக்கர எழுத்துக்கள் எழுதப்படல் வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

(இந்த பஞ்சாக்கர எழுத்துக்களைப் பற்றி 20ம் பக்கத்தில் விரிவாக தந்துள்ளோம்)

இந்த எழுத்துக்களில் இறைவனும் நெறிமுறையாக அமர்ந்திருப்பார் என்கிறார். இந்த எழுத்துக்களின் பெருமையை பார்ப்பதற்கு முன்னர் இந்த எழுத்துக்கள் எவையென தெரிந்து கொள்வோம்.

**பன்னிரெண்டு உயிர் எழுத்துக்களான....**

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ

**ஆய்த எழுத்து கூடிய நிலையில் உயிர் எழுத்துக்கள் பன்னிரெண்டு...**

ஃஅ, அஃ, ஃஇ, இஃ, ஃஉ, உஃ, ஃஎ, எஃ, ஃஐ, ஐஃ, ஃஒ, ஒஃ

**மெய்யெழுத்து பதினெட்டு..**

க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன

**ஆய்த எழுத்து கூடிய நிலையில் மெய்யெழுத்து எட்டு..**

ஃக, கஃ, ஃச, சஃ, ஃப, பஃ, ஃய, யஃ

**ஆயுத எழுத்து ஒன்று**

ஃ

ஆக மொத்தம் ஐம்பத்தியோரு எழுத்துக்கள். இந்த எழுத்துக்கள் ஒவ்வொன்றும் மனிதனின் உடல் அவயங்களை ஆட்சி செய்வதாக திருமூலர் கூறுகிறார்.

இந்த திருவம்பலச் சக்கர வழிபாட்டை நன்கு அறிந்த சிவ அடியார் மூலம் எழுதி, வழிபடும் முறையை குரு உபதேசமாக பெற்று, வீட்டு பூஜையறையில் வைத்து வழிபட்டால் மிகுந்த பயன் கிடைக்கும்.

வில்வத்தால் அர்ச்சித்து வழி பட்ட பிறகு, அஷ்டாங்க நமஸ்காரம் செய்து கற்பூர ஆரத்தி செய்ய வேண்டும். நெய் இட்ட சாதத்தை நிவேதனம் செய்து, தேங்காய், பழம், தாம்பூலம் வைத்து வணங்கவேண்டும்.



எல்லோரும் திருவம்பலச் சக்கரத்தை வீட்டில் வைத்துக் கொள்ளலாம். ஆனால் அதற்கென சொல்லப்பட்ட எளிய கட்டுப்பாட்டு முறைகளைக் கையாள வேண்டும். லாகிரி புகையிலை வஸ்துகளை பயன்படுத்தாமை, தெய்வ நிந்தையை தவிர்ப்பது, புலன் அடக்கம் ஆகியவை அவசியம்.

இந்த வழபாட்டை மேற்கொள்ளும் வீட்டில் லட்சுமி கடாட்சம் தங்கும், மேலும் கெடு சக்திகளும், தீமைகளும் இச்சக்கர வழிபாட்டை மேற்கொள்பவரை கண்டால் அஞ்சி ஓடும்.

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து Aanmeega malar (mobile app) டவுன்லோடுசெய்து, செல்போனிலேயே நமது இதழ்
GET IT ON Google Play



# மனித உடற்பாகத்தை ஆட்சி செய்யும் பஞ்சாக்கர எழுத்துக்கள்

பஞ்சாக்கர எழுத்துக்கள் என்பது சிவ பூஜையில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இந்த பஞ்சாக்கர எழுத்துக்களை வைத்து எழுதப்படும் சக்கரத்தை திருவம்பலச் சக்கரம் என்று சிவபக்தர்கள் அழைப்பார்கள்.

இந்த சக்கர பூஜை முறைகளைப் பற்றி பக்கம் 18ல் நாம் ஏற்கெனவே பார்த்துள்ளோம்.

தற்போது இந்த எழுத்துக்களின் மகிமையையும், இந்த எழுத்துக்கள் ஆட்சி செய்யும் மனித பாகங்களைப் பற்றியும் தெளிவாக பார்ப்போம்.

பஞ்சாக்கர எழுத்துக்களைப் பற்றிய அறிமுகத்தினையும், ஐம்பத்தியோரு எழுத்துக்களைப் பற்றியும், (இந்த எழுத்துக்களை 18ம் பக்கம் கொடுத்துள்ளோம்) மகிமை வாய்ந்த இந்த எழுத்துக்கள் மனித உடலின் பாகங்களை ஆட்சி செய்வதாக திருமூலர் கூறியுள்ளார்.

இந்த எழுத்துக்கள் ஆட்சி செய்திடும் அவயங்கள் பற்றியும் அவற்றின் தத்துவார்த்த குறியீடுகளை குறித்து நான் அறிந்தவகையில் இங்கே பகிர்ந்து கொள்கிறேன்.

பஞ்சாக்கர எழுத்துக்கள் ஆட்சி செய்யும் அவயங்கள் என திருமூலர் கூறிடும் பட்டியலை கான்போம்.

திருமுடி, நெற்றி, வலக்கண், இடக்கண், வலது செவி, இடது செவி, வலது மூக்கு, இடதுமூக்கு, வலதுகன்னம், இடதுகன்னம், மேலுதடு, கீழுதடு, மேல் வாய்ப்பல், கீழ்வாய்ப்பல், தாடை, உச்சந்தலை, வலக்கை, இடக்கை, வலது திருவடி, இடது திருவடி, வலது விலா, இடது விலா, குலை (மார்புக்கும் வயிற்றுக்கும் இடையில் உள்ள உறுப்பு), கீழ்வயிறு, வயிறு, குறி, வித்து, மூலாதாரம், குதம், தொண்டைக் குழி, இடது மார்பு, வலதுமார்பு, உச்சி, ஆக்கினை, விசுத்தி, அனாகதம், மணிபூரகம், சுவதிஷ்டானம், தொடை, முழந்தாள், கணுக்கால், இதயம், நாக்கு, முள்ளந்தண்டு, மூளை, சிறுநீர்ப்பை, இடுப்புக்கூடு, சிறுநீரகம், ஈரல், மண்டையோடு, புருவமத்தி என ஐம்பத்தியொரு அவயங்களை குறிப்பிடுகிறார்.

இந்த அவயங்களுக்கு உரிய எழுத்துக்களை குருமுகமாய் அறிந்து அதற்கான யோகம் செய்வ்வதே சிறப்பு முறையான பயிற்சியும், பக்குவ நிலையினை அடைந்தவரே இந்த சூட்சுமத்தினை மற்றவருக்கு அருள வேண்டுமென விதிமுறை வகுக்கப்பட்டுள்ளது.

இனி இந்த பஞ்சாக்கர எழுத்துக்களின் பின்னாலிருக்கும் தத்துவ விளக்கத்தினை பார்ப்போம்.

"மண்டலம் ஐந்து வரைகளுள் ஈர் ஆறு
கொண்டிட நிற்க்கும் குடிகளும் ஆறு எண்மர்
கண்டிட நிற்கும் கருத்து நடுவாக
உண்டு நிலாவிடும் ஓடும் பதத்தையே"

– திருமந்திரம்

நமது ஆத்மாவை ஐந்து வகையான மண்டலங்களும், பன்னிரெண்டு காவல்களும் நிறைத்திருப்பதாகவும். நமக்குள் ஆறுவகையான குடிகள் இருப்பதாகவும், இந்த உடலை எட்டு கண்ணியர் கண்காணிப்பதாகவும் கூறுகிறார்.

இதில் ஐந்து மண்டலங்கள் என்பது பூமி மண்டலம், நீர் மண்டலம், வாயு மண்டலம், தீ மண்டலம், ஆகாய மண்டலம் என பஞ்சபூத கூறுகளை உணர்த்துகிறது.

பன்னிரெண்டு காவல் என்பது இந்திரன், அங்கி, வருணன், வாயு, குபேரன், ஆதித்தன், சந்திரன், யமன் ஆகியோர் எட்டு திசைக்கும் காவலாக இருப்பதாகவும், இவர்களைத் தாண்டி கணபதி, குமரன், வயிரவன், துர்க்கை என்கிற நால்வரோடு சேர்த்து மொத்தம் பன்னிரெண்டு காவல்கள் இருக்கின்றது என்கிறார்

நமக்குள் இருக்கும் ஆறு குடிகள் எனப்படுவது மெய், வாய், கண் ,மூக்கு ,செவி, மனம் என்பவற்றை குறிக்கிறது.

உடலைக் கண்கானிக்கும் எட்டு கன்னியர்களாக அனங்க குசுமை, அங்க மேகலை, அனங்க மதனை, அங்க மதனா, அனங்க ரேகை, அங்க வேகினி, அனங்க குசை, அங்க மாலினி என்பாரை குறிப்பிடுகிறார்.

இந்த உண்மைகளை அறிந்து இந்த் பஞ்சாக்கர எழுத்துக்களின் யோகத்தை முறையே பயன் படுத்து வோனுக்கு அழிவில்லை என்கிறார். இதன் படி நின்று ஒழுகினால் இறையருள் சித்திக்குமாம்.

# நான்கு அடிப்படை சமய வழிமுறைகள்

இந்த கட்டுரைக்கு முன்னருள்ள கட்டுரையில் அறிவு சார்ந்த வழிமுறை மற்றும் பக்தி சார்ந்த வழிமுறையைப்பற்றிய குருதேவருடைய போதனைகளைப்பற்றி எழுதியிருந்தேன். இந்தக்கட்டுரையில் தியான வழிமுறை மற்றும் விஞ்ஞான வழிமுறை அல்லது யோகம் சம்பந்தப்பட்ட அவருடைய போதனைகளைப்பற்றி கூற உள்ளேன்.

### 3. தியான வழிமுறை:

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் தியான வழியைப்பற்றி அருளுகிறார்: "இதுவும் இதற்கடுத்த வழிமுறையும், முழுமையாக விஞ்ஞான பூர்வமானவை மற்றும் இவை ஒரு நடைமுறைப் பயிற்சிவழியை உள்ளடக்கியுள்ளன மற்றும் தங்களது சொந்த வாழ்க்கையில் சத்தியத்தைத் தனிப்பட்ட முறையில் உணர்ந்தறிந்த மகத்தான முனிவர்களால் வகுத்து உரைக்கப்பட்டவையுமாகும்.

இந்த வழிமுறைகள் உலகளாவிய உண்மையாக இருப்பது காணப்படும். நேரடியாகஉணரப்படும் ஞானமே, அவற்றின் தகுதி மற்றும் நடைமுறை பயனுக்கான மிகச்சிறந்த நிரூபணமாகும். தியான வழிமுறைகளை, அவை ஒரு பழக்கமாக ஆகும்வரை தவறாமல் பயிற்சி செய்வதன் மூலம் நம்மால் 'உணர்வுடன்கூடிய உறக்கம்' என்ற ஒரு நிலைக்கு நம்மைக் கொணர முடியும்.

நாம் பொதுவாக இந்த அமைதியான, இன்பம் நிறைந்த, சாந்தமான நிலையை ஆழ்ந்த உறக்கத்தில் சென்று உணர்வற்ற நிலையை அணுகுகிறபோதோ அல்லது அதிலிருந்து விழிப்புற்று உணர்வு நிலையை அணுகுகிறபோதோ மட்டுமே அனுபவிக்கிறோம். உணர்வுடன்கூடிய உறக்கமாகிய இந்த நிலையில் நாம் அனைத்து எண்ணங்கள் மற்றும் வெளிப்புற உடல் உணர்வுகளிலிருந்தும் விடுதலை அடைகிறோம். அத்துடன் ஆன்மா தன்னைக்குறித்து சிந்திப்பதற்கான ஒரு வாய்ப்பைப் பெறுகிறது.

தியானப் பயிற்சியின் ஆழம் மற்றும் வழக்கம் தவறாத பயிற்சி ஆகியவற்றைப் பொறுத்து அவ்வப்பொழுது ஆன்மா ஆனந்தம் நிறைந்த நிலையை அடைகின்றது. இந்த தியான வழிமுறையின் மூலம் புலன் அல்லது வெளி உறுப்புகள் உறக்கத்தில் உள்ளதுபோல் தன்னிச்சை நரம்புகள் அமைதியுறுவதன் மூலமாக கட்டுப்படுத்தப்படுகின்றன.

இந்த தியானநிலை, உண்மையான தியானத்தின் முதல் நிலையாகும். ஆனால் இறுதி நிலை அல்ல. உணர்வுடன்கூடிய உறக்கத்தில் வெளி அல்லது புலன் உறுப்புகளை மட்டுமே கட்டுப்படுத்த நாம் கற்கிறோம். ஒரே ஒரு வித்தியாசம், சாதாரண உறக்கத்தில் புலன் உறுப்புகள் தாமாகவே கட்டுப்படுத்தப்படுகின்றன.அதே சமயம் தியானத்தில் புலன் உறுப்புகள் தன்னிச்சையாகக் கட்டுப்டுத்தப்படுகின்றன."

"எனினும், தியானத்தின் இந்தத் துவக்க நிலையில், ஆன்மா இன்னமும் அனிச்சையான மற்றும் அக உறுப்புகளால், உதாரணமாக, கட்டுப்படுத்துவதற்கு அப்பார்ப்பட்டதென நாம் தவறாகக் கருதும் நுரையீரல்கள், இதயம் மற்றும் உடலின் பிற பாகங்களால் தொந்தரவுக்கு ஆளாகின்றது. (இந்த உள் உறுப்புகளுக்கு எவ்வாறு ஓய்வு அளிப்பது என ஞானியரும் தலை சிறந்த மகான்களும் அறிந்திருந்ததை நாம் அரிதாகவே அறிந்திருக்கிறோம். அவை கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை என நாம் கருதுகின்ற காரணத்தால் அவை மிதமிஞ்சி வேலை செய்து திடீரென்று நின்று விடுகின்றன.

இந்த நிறுத்துதலைத்தான் நாம் 'மரணம்' அல்லது 'மீளாத்துயில்' எனக் குறிப்பிடுகிறோம்) இதைவிட சிறந்த ஒரு வழிமுறையை நாம் நாடவேண்டும்; ஏனெனில் ஆன்மா, அனைத்து உடல் உணர்வுகளையும் விரும்பிய மாத்திரத்தில் கட்டுப்படுத்த முடியாமல், இவற்றின் தொல்லைகளுக்கு ஆட்பட்டவாறு நீடித்திருக்கும்வரை, அது கட்டுப்படுத்துதல்பற்றிய நம்பிக்கையை மட்டுமின்றி, தன்னை அறிவதற்கான நேரத்தையும் அல்லது வாய்ப்பையும்கூட பெறமுடியாது."

### 4. விஞ்ஞான வழிமுறை அல்லது யோகம்

விஞ்ஞான வழிமுறையைப்பற்றி குருதேவர் கூறுகிறார்: "இந்த விஞ்ஞான வழிமுறையில் இங்கும் இப்புத்தகத்தின் மீதியுள்ள பகுதி முழுவதும் குறிப்பிடப்பட்டுள்ள விஞ்ஞான வழிமுறை "கிரியா யோகம்" ஆகும். இது பரமஹம்ஸ யோகானந்தரால் யோகதா சத் சங்கப் பாடங்களில் போதிக்கப்பட்டுள்ள தியானத்தின் குறிப்பிட்ட யோக உத்திகளை உள்ளடக்கிய ஒரு புராதன ஆன்மீக விஞ்ஞானமாகும். செயல்முறை சார்ந்த மற்றும் முறை தவறாத பயிற்சியை மேற்கொள்வதன் மூலம், ஆன்மாவை, இறுதி இறப்பு இல்லாமலேயே உடலிலிருந்து விடுபட்ட ஒன்றாக உணர முடியும்."

மேலும் அவர் கூறுகிறார்; "நான் அந்த செயல்முறையைப் பற்றிய பொதுவான கருத்தையும் அதன் அடிப்படையாக அமைந்துள்ள உண்மையான விஞ்ஞான கோட்பாட்டையும் மட்டும் அளிக்கிறேன். இதனை எனது சொந்த அனுபவத்திலிருந்து இங்கே குறிப்பிடுகிறேன். இது உலகளாவிய உண்மையாகக் கண்டுகொள்ளப்படும் என்று என்னால் கூற முடியும். மேலும் இந்த வழிமுறையை பயிற்சி செய்கையில், நான் சுட்டிக்காட்டியதுபோல், நமது இறுதி இலக்கான பேரானந்தம் மிகவும் ஆழ்ந்து உணரப்படுகிறது என்பதையும் என்னால் துணிந்து கூற முடியும். இந்தப்பயிற்சியே தீவிர ஆனந்தத்தைத் தரக்கூடியது. நமது ஐம்புலன்களோ மனமோ எப்பொழுதும் நமக்கு அளிக்கக்கூடிய மிகப்பெரிய இன்ப நுகர்வைவிட மிக அதிக தூய்மையான ஆனந்தம் நிறைந்தது என நான் துணிந்து கூறுவேன். தனது சொந்த அனுபவத்தின் மூலம் பெறப்படுவதைவிட, அதன் உண்மைத் தன்மை குறித்த வேறு எந்த நிரூபணத்தையும் எவருக்கும் அளிப்பதைநான் விரும்பவில்லை. பொறுமையுடனும் முறை தவறாமலும் இதனை ஒருவர் எவ்வளவு அதிகம் பயிற்சி செய்கிறாரோ, அந்த



66
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக


ஆன்மிகமலர் மெயில் புக்
www.aanmeegamalar.com

அளவு அதிகமாக அவர் பேரானந்தத்தில் ஆழமாகவும் நீண்டநேரமும் நிலை கொள்வதை உணர்கிறார்.”

மேலும் அவர் கூறுகிறார்: “தீயப்பழக்கத்தில் தொடர்ந்து நீடித்திருப்பதன் காரணமாக தேக உணர்வு நிலையானது, அதன் அனைத்து நினைவுகளோடும் அவ்வப்போது மீண்டெழுந்து அந்த அமைதி நிலைக்கு எதிராகப்போரிடுகிறது. ஆனால் எவராவது முறை தவறாமலும் நீண்ட நேரங்களுக்கும் பயிற்சி செய்தால், அவர் காலக்கிரமத்தில் பேரானந்தத்தின் ஒரு மிக உயர்ந்த நிலையில் தன்னைக் காண்பார் என்ற உத்தரவாதம் தர முடியும். எனினும் நாம் இந்த வழிமுறையில் அழைத்துச் செல்லக்கூடிய சாத்தியமான விளைவுகளை முன்கூட்டியே கற்பனை செய்வதற்கு அதிபுத்திசாலித்தனமாக நாடிவிட்டு, பின் ஒரு சிறிய சோதனை முயற்சிக்குப்பிறகு பயிற்சி செய்வதை நிறுத்திவிடக்கூடாது. நல்ல முன்னேற்றத்தை எட்டுவதற்காக, பின் வருபவை இன்றியமையாதது. முதலாவதாக, கற்றுக்கொள்ளவேண்டிய விஷயத்தின்மேல் அன்பார்ந்த கவனம்; இரண்டாவதாக, கற்றுக் கொள்வதற்கான விருப்பம் மற்றும் ஆராய்ச்சியில் ஓர் ஆர்வமிக்க ஊக்கம், மூன்றாவதாக விரும்பிய இலக்கை எட்டும்வரை உறுதியுடனிருத்தல். ஒரு சிறிய பயிற்சிக்குப் பின்னர், நாம் பாதிவழி மட்டுமே சென்று அதனை நிராகரித்துவிட்டால், விரும்பிய பலன் கிட்டாது.

ஆன்மீகப் பயிற்சிகளின் தொடக்க நிலையாளராக உள்ள ஒருவர், வல்லுனர்களின் (அனைத்து காலங்களின் மகான்கள் மற்றும் தீர்க்கதரிசிகள்) அனுபவத்தை முன்கூட்டியே மதிப்பிட முயற்சி செய்தால், அவர், மேல் படிப்புகளின் பாடங்கள் எவ்வாறு இருக்குமென கற்பனை செய்ய முயலும் ஒரு சிறிய குழந்தையைப் போன்றவர். ஆன்மா, நாம் அறியாத எவ்வளவோ யுகங்களாக உடலில் சிறைப்பட்டிருக்கிறது என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். இது ஒரே நாளில் விடுவிக்கப்படவும் முடியாதது. குறைவான காலமோ அல்லது ஒழுங்கு தவறியோ வழிமுறையை பயிற்சி செய்தல், பேரானந்தத்தின் ஒப்புயர்வற்ற நிலைக்கு ஒருவரை அழைத்துச் செல்லவும் அல்லது உள் உறுப்புகள் மீதான கட்டுப்பாட்டை ஒருவருக்கு அளிக்கவும் செய்யாது. எவ்வளவு அதிகமாக நாம் பயிற்சி செய்கிறோமோ அவ்வளவு அதிகமாக நாம் பேரானந்தத்தைக் கொணரும் என்ற உத்தரவாதம் அளிக்கப்படக்கூடியது. நாம் அனைவருமே பேரானந்தத்தைத் தேடும் சாதகர்கள் என்பதால் அனைவருக்குள்ளும் உள்ளதான, அனைவராலும், உணரப்படக்கூடியதான பிரபஞ்ச உண்மையை நீங்களே உணர்ந்து அனுபவிக்க நீங்கள் முயற்சி செய்ய வேண்டுமென நான் விரும்புகிறேன். இந்த நிலை எவருடைய கண்டுபிடிப்பும் அன்றுஅது ஏற்கனவே அங்கே இருக்கின்றது. நாம் வெறுமனே அதனை கண்டுபிடிக்க வேண்டும்.”

அன்பு குருதேவர் தொடர்கிறார்: “இந்த உண்மையை நீங்கள் பரிசோதிக்கிறவரை நான் எழுதுவதை அலட்சியப்படுத்தாதீர்கள்.பலவிதமான கோட்பாடுகளைப்பற்றிக் கேள்விப் பட்டு நீங்கள் சலிப்படைந்திருக்கலாம்.

ஏனெனில் அவற்றில் எதுவுமே இந்நேரம்வரை உங்களது வாழ்க்கையில் எவ்வித நேரடியான விளைவையும் ஏற்படுத்தியிருக்காது. இது கோட்பாடல்ல. உணர்ந்தறியப்பட்ட உண்மை. நிச்சயமாக அனுபவிக்க முடியக்கூடியதைப்பற்றிய ஒரு கருத்தை உங்களுக்கு அளிக்க நான் முயன்று கொண்டிருக்கிறேன். இந்தியாவின் ஒரு மகத்தான மகானிடமிருந்து (ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வர், பரமஹம்ஸ யோகானந்தரின் குரு) கற்றுக்கொண்ட இந்த உண்மைகளுக்கு நான் உங்கள் கவனத்தை ஏன் ஈர்க்கிறேன் என நீங்கள் வினவலாம். என்னிடம் எதாவது சுயநலமான விருப்பம் இருக்கின்றதா? இதற்கு பதில் ‘ஆம்’ என்பதே. இதை நீங்கள் பயிற்சி செய்து உணர்வதில் உங்களுடைய ஆனந்தத் தைக்காண்பதற்கு உங்களுக்கு உதவி செய்வ தற்காக பதிலுக்கு தூய ஆனந்தத்தைப் பெறும் நம்பிக்கையுடன் நான் இந்த உண்மையை உங்க ளுக்கு வழங்க விரும்புகிறேன்,” என்கிறார் குரு தேவர்.

இந்த ஆன்மீக மலரில் இடம் பெற்றுள்ள குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தரின் போதனைகள் உள்ளடக்கியுள்ள ‘மனித வாழ்வு மேம்படுவதற்காக’ என்ற கட்டுரையை தொடர்ந்து படிக்கின்ற எனது மிகுந்த அன்பிற்குரிய மற்றும் வணக்கத்திற்குரிய சகோதர வாசகர்களே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பாருங்கள்! நமது குருதேவர் நமக்காக எவ்வளவு உழைத்துக்கொண்டிருக்கிறார்என்பதையும் அவர் மனித இனத்தின்மேல் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார் என்பதையும் இந்தக் கட்டுரையைப் படித்தாலே தெரியவரும். அவருடைய சொற்பொழிவுகள்தான் இன்றைக்கு மகத்தான நூல்களாக அமைக்கப்பட்டுள்ளன.

அவருடைய தற்போதைய சீடர்களானாலும் சரி, எதிர்கால சீடர்களானாலும் சரி, அனைத்து இதயங்களையும் அவர் பக்கம் ஈர்க்கும் வகையில் அவருடைய போதனைகள் உள்ளன. மனிதனாகப் பிறந்த ஒவ்வொரு ஆன்மாவையும் பேரானந்தப் பெரும் வெள்ளமாகின்ற பரம்பொருளிடம் சேர்ப்பதே அவருடைய முதன்மைப் பணியாக உள்ளதென அவருடைய போதனைகளிலிருந்து நன்கு தெரியவருகிறது. அது அவர், இறைவன் மீது வைத்துள்ள பேரன்பும், இறைவனின் குழந்தைகளாகின்ற நம் அனைவரின் மீதும் வைத்துள்ள பேராதரவும் அளவிட முடியாதது. என்பதைத் தெளிவுறக் காட்டுகிறது. இவ்வாறான குருதேவர் கிடைப்பதற்கு பல பிறவிகளில் செய்த தவம்தான் காரணம் என்றுதான் கூறவேண்டும். இன்றைய உலகத்தில் வாழும் மனிதர்கள் அனைவரும் மனிதகுணம் உடையவர்களாகவே இல்லை. ஏராளமானோர் கொடிய விலங்குகளின் குணமுடையவர்களாகவே இருக்கின்றனர். உதாரணமாக இறைவனின் படைப்பாகிய கம்பளிப் புழுவை எடுத்துக்கொள்வோம்.

அது சிறு புழுதான். விலங்கு அல்ல. அதைப்பார்த்தாலே அருவருப்பாக இருக்கும். அதை நாம் தொட்டாலும் அது நம் உடம்பில் விழுந்தாலும் நமக்கு உடல் முழுவதும் அரிப்பு ஏற்படும். அதே சமயம் பட்டாம்பூச்சியை எடுத்துக்கொள்வோம். அது பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கிறது. அந்தப் பூச்சியால் மனிதர்களுக்கு எந்தத் தொல்லையும் இல்லை.

கம்பளிப்புழுவும் பட்டாம்பூச்சியும் வெவ்வேறு படைப்புகள். ஆகையால் கம்பளிப்புழுவை பட்டாம் பூச்சியாக மாற்றி அமைக்க முடியாது. அவை இரண்டும் தனித்தனியான குணங்களைக் கொண்டவைகளாகவே இருக்கின்றன. ஆனால் இறைவனின் படைப்பாகிய கம்பளிப்புழு மற்றும் விலங்குகளின் தன்மையுடைய மனித மனதை நமது அன்பிற்குரிய குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் மாற்றியுள்ளார்; இன்னும் மாற்றிக் கொண்டுதான் இருக்கிறார்: மேலும் மாற்றுவார். பெருமைக்குரிய மற்றும் மகிமைக்குரிய மகாவதார பாபாஜியின் வம்ச பரம்பரையில் வந்த குருதேவர் நமக்கு குருவாகக் கிடைக்கப் பெற்றுள்ளதால், சீடர்களாக இருக்கும் நாம் அனைவரும் மிகவும் பாக்கியசாலிகளாவோம். இதுபோன்ற குருமார்கள் கிடைப்பது மிகவும் அரிது.

இந்தத் தருணத்தைத் தவறவிடாமல் அவருக்குச் சீடர்களானவர்கள் மற்றும் சீடர்களாகப் போகின்றவர்கள் அனைவரும் குருதேவருடைய போதனைகளை படித்து, மனதில் நிறுத்திச் சிந்தித்துச் செயல்படவேண்டும்; அவற்றைப் பின்பற்ற வேண்டும். குருதேவர் கூறியுள்ள போதனைகளை பணிவன்புடன் படித்து, அவரையும் அவருடைய போதனைகளையும் நம் இதயத்தில் பாதுகாத்து, அதற்கு வேண்டிய உணவையும் (தியானப் பயிற்சியை) உற்சாகத்தையும் (இடைவிடாமலுள்ள பயிற்சியை) நாம் அளிக்க வேண்டும். நிறையவே அளிக்க வேண்டியுள்ளது என்று எனக்கே தோன்றுகின்றது.

பக்தி சார்ந்த வழிமுறையும் சிறந்ததுதான். அது உருவமுள்ள இறைவன் மீது பற்று கொண்டு வழிபடுவதற்கு அது மிகவும் சிறந் தது. எனினும், நிர்குண பரப்பிரம்மத்தை அல்லது பரம்பொருளை அடைவதற்கும் பிறவியை அறுப்பதற்கும் உள்ள வழி தியானத்தைப் பயில்தலும் விஞ்ஞான வழிமுறையான ‘கிரியா’ யோகத்தைப் பயில்தலுமாகும். இந்த இரண்டு வழிமுறைகளும்தான் மிகவும் முக்கியமானதும் சிறந்ததுமாகின்றன. இறைவனின் சாம்ராஜியத்தின் நுழைவாயிலுக்கான ‘ சாவிதான் ‘ கிரியா யோகம்’ சிறு அலைஅளாகின்ற நம் ஆன்மாக்கள் சர்வ வியாபகத் தன்மையுடைய பேரொளியாகின்ற நிர்குண பரப்பிரம்மாகின்ற மகாசமுத்திரத்துடன் (இறைவனுடன்) இணையும்பொழுது பிறவிப்பிணி நீங்கிவிடும்.

எனவே மேலே கூறியுள்ள பொருள் சம்பந்தப் பட்ட குருதேவருடைய மகத்தான போத னைகளை இது வரையில் படிக்காதவர்கள் இக்கட்டுரையின் மூலமாவது படித்து பயனடையும்படி எனது பேரன்பிற்குரிய, பெருமதிப்பிற்குரிய, வணக்கத்திற்குரிய குருதேவரின் மகத்தான வேண்டுகோளை ஏற்று வாழ்க்கையை நடத்தவும், குரு தேவர் ஆணித்தரமாகக் கூறுகின்ற, அவர் உணர்ந்தறிந்த உண்மையை, அதாவது பிரபஞ்ச இரகசியத்தை நாம் அனைவரும் உணர்ந்தறிய (பரம் பொருளாகின்ற பேரானந்தத்தை) வேண்டும் என்று உங்களிடத்தில் அன்புடனும் மிகவும் பணிவுடனும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அதுதான் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரின் கடமையும் லட்சியமுமாகும்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909

# புகைப்படம் எடுத்தால் ஆயுள் குறையுமா?




நாம் கிராமபுரங்களில் வயதானவர்களுக்கு ஒரு நம்பிக்கை உண்டு அது என்ன வென்றால் புகைப்படம் (Photo) எடுத்தால் ஆயுள் குறையும் என்று ஆகையால் அவர்கள் புகைப்படும் எடுப்பதை பெரும்பாலும் விரும்பமாட்டார்கள் அதைபோல் அவர்கள் வாரிசுகளையும் புகைப்படம் எடுக்க அவர்கள் அனுமதிப்பதில்லை.

ஆனால் புகைப்படத்திற்கும் ஆயுளுக்கும் என்ன சமந்தம்? இதற்கும் சுக்கிரனுக்கும் (வெள்ளி) என்ன சமந்தம் என்பதை பார்ப்போம்

வானில் உள்ள கோல்களிலே சுக்கிரன் தான் மிகவும் பிரகாசமான கோள் ஆகையால் தான் Which is the brightest plannet என்ற கேள்விக்கு நாம் Venus என்றே பதில் தருவோம் அதுதான் உண்மையும் கூட.

இந்த சுக்கிரனின் வேலை என்னவென்றால் ஒரு மனிதனுக்கு புகழ்கொடுப்பது ஒளி கொடுப்பது அதாவது ஒரு மனிதனை அனைவருக்கும் தெரியும் படி அவனை பிரகாச படுத்தி புகழின் உச்சிக்கே கொண்டு செல்வது.

அதனால் தான் எவன் ஒருவனின் ஜாதகத்தில் சுக்கிரன் வலிமை பெற்று இருக்கிறாறோ, அவனுக்கு சினிமாவில் சாதிக்க வேண்டும், கலைதுறையில் முன்னேறவேண்டும் போன்ற எண்ணங்கள் வரும்.

ஒருவனின் ஜாதகத்தில் சுக்கிரனின் நிலையே பொருத்தே அவன் பிரகாசம் அடைவான் அனைவரின் மத்தியில் அவன் பிரபலம் அடைவான அதாவது கலைதுறையில் சாதிப்பான என்று சொல்ல முடியும்.

சரி இதற்கும் நாம் புகைப்படம் எடுப்பதற்கும் என்ன தொடர்பு என்றால், நாம் புகைப்படும் எடுக்கும் போது அந்த புகைப்பட கருவியில் இருந்து வெளிவரும் வெளிச்சம் நம்மீது படும்.

அந்த ஒளி நம்மீது பட்ட விளைவு தான், நாம் பார்க்கும் புகைப்படும். ஆகையால் இதுவும் ஒருவகையான வெளிச்சத்தின் வெளிப்பாடே. இந்த புகைப்படக்கருவி மற்றும் ஒளிப்படக் கருவியில் (Photo camera &video camera) இருந்து வருகிற ஒளியின் பலன் தான் நாம் பார்க்கும் புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் (Photos&videos) இதன் மூலமாகவே நாம் பிரபலம் அடைகிறோம் அதாவது வெளிச்சத்திற்கு வருகிறோம். ஆகையால் இதற்கும் சுக்கிரனுக்கும் சமந்தம் உண்டு என்பது மறுக்கமுடியாது உண்மை.

சரி புகைப்படம் எடுப்பதும் வெளிச்சத்திற்கு வருவதும் சதாரண விசயம் தானே இதில் என்ன கெட்டது உள்ளது பெரியவர்கள் புகைப்படம் எடுக்கவேண்டாம் என்று சொன்னார்கள்?

இதன் காரணம் என்னவென்றால் ஜோதிட விதியின் படி சுக்கிரன் என்ற கிரகம் வெளிச்சத்திற்கும் புகழுக்கும் மட்டும் காரணம் கிடையாது, அது மற்றொரு முக்கியமான விசையத்திற்கு காரணம்.

அது தான் ஒருவனது திருமண வாழ்க்கை சுக்கிரனே திருமணத்திற்கும் அதிபதி ஆவன். நாம் சுக்கிரனை முழுவதுமாக பயன்படுத்தி நம்வாழ்வில் பிரபலம் அடைந்துவிட்டோம், அதாவது வெளிச்சத்திற்கு வந்துவிட்டோம் என்று வைத்துகொள்வோம்.

பிறகு எப்படி நம் திருமண வாழ்க்கை சிறப்பாக அமையும், அதாவது என்னவென்றால் நாம் பிரபலம் அடையவே சுக்கிரனின் முழு பலத்தை பயன்படுத்தி விட்டோம் என்றால் பிறகு அந்த சுக்கிரனால் எப்படி நம் திருமண வாழ்க்கையில் பயன்தர இயலும்.

இன்னும் புரியும் படி சொல்ல வேண்டும் என்றால் சினிமாவில் சாதித்த பிரபலங்களை எடுத்துகொள்ளுங்கள் 90யில் இருந்து 95% சினிமா பிரபலங்களின் வாழ்க்கை சிறப்பாக அமையவில்லையே ஏன்?

சினிமா பிரபலங்களில் பாதி நபர்களுக்கு திரு மணம் நடந்த கொஞ்சம் நாட்களிலே விவாகரத்து கேட்டு நீதிமன்றம் செல்கின்றனர் இன்னும் சிலர்க்கு திருமணமே நடப்பது இல்லை இன்னும் பலர் முறை யற்ற திருமணம் வாழ்கையைவே வாழ்கின்றனர்.

இதற்கு எல்லாம் காரணம் சுக்கிரனே. சுக்கிர னின் சக்தியை நாம் பிரகாசம் அடைவதற்கும் புகழ்அடைவதற்கும் வெளிச்சம் அடைவதற்குமே பயன்படுத்திவிட்டால் பிறகு அந்த சுக்கிரனால் எப்படி நம் திருமாண வாழ்க்கையை பிரகாச படுத்த இயலும் இயற்கையாகவே அதன் பலம் குறைந்து நம் திருமண வாழ்க்கையை சிறப்பில்லாமல் செய்துவிடும் என்பதே உண்மை.

இதனால்தான், சுக்கிரனின் ஒளியை மனிதர்கள் அடிக்கடி கிரகிக்கக் கூடாது, (போட்டோ எடுக்க கூடாது) என்று நம் முன்னோர் கூறினர்.

இப்பொழுது புரிகிறதா அவர்கள் ஏன் அப்படி சொன்னார்கள் என்று. அனைத்திற்கு பின்பும் ஒரு காரண காரியங்கள் மறைந்துள்ளது.

– கோகுல மணிகண்டன் சான்றார்
தொடர்பு எண்: 09677359474




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033

# முதுமை, இளமைக்கால முழுமைகள் ஒவ்வொரு மனிதனின் மூளைக்கும் வேண்டும்

❖ உன்னுடைய சொந்ததவறுகளை நீயே கண்டுபிடி, பிறர் கண்டுபிடிக்க விட்டு விடாதே. எப்படி கண்டுபிடிப்பது என்றால் சிந்தனை, ஓயாத படிப்பு, எடுத்து இயம்புதல், பேசுதல், உறுதிப் படுத்துதல் இவைகளினால் அது முடியும். இவ்வண்ணம் உனது தவறுகளைக் களைந்துகொண்டு உன்னையே திருத்தப் பாதையில் வைத்து நீயே முன்னேறுவாய் இதுவே கல்வி.

❖ மேற்சொன்னது உண்மை ஆராய்ச்சி என்றாலும் கல்வி கற்பதற்காக கல்வி சம்பந்தமான கேள்விகளை எழுப்புவது மட்டும் உனது சிந்தனையின் பகுதி என்று எண்ணிவிடாதே. கேள்வி கேட்பது மட்டும் சிந்தனையல்ல. அது அதிக அறிவைப் பெறுவதற்கு உண்டான வழிவகை ஆகும். இத்தகைய மனிதன் கிடைக்கப் பெறாத ஒரு அற்புத மாணாக்கன் ஆவான்.

❖ ஒரு குருவோ ஒரு பேராசிரியரோ நடைமுறையில் ஓடுகின்ற ஒரு பெருக்காறு ஆகும். ஆறு ஓடிக் கொண்டே இருப்பதைப் போல நீ எல்லா இடத்திற்குமாகத் திரி. பார்ப்பவைகளில் இருந்து உணருபவனைப் போன்று, அறிவைப் பெறு. இத்தகைய மனிதனிடம் இருந்தே அன்பு என்பது பிறக்கின்றது.

❖ மிகவும் நெருக்கமாக இருந்து கொண்டு இருக்கின்றவர்களைப் போன்று ஒரு வர்ணம் தீட்டுகின்ற தொழிலாளியும் அவனது கை புருசும் இருக்கிறது. எப்பொழுதும் தயார் நிலையில் இருக்கின்ற ஒரு வேலைக்காரனைப் போன்றதே ஒரு வர்ணம் தீட்டுகின்ற புருசு. இதுபோல நீயும் கடவுளும் உடனடி வெற்றிக்கு தயார் நிலையில் இருக்கிறீர்கள்.

❖ ஒரு வர்ணம் தீட்டுகின்ற தொழிலாளி கை புருசுவி தூரி கையினால் வர்ணம் தீட்டிய பின்பே ஒரு தொழிலாளி என்கிற பெயரினைப் பெறுகிறான். அதுபோல நீ வேலை செய்ய ஆரம்பித்த உடன் கடவுளும் சர்வ வல்லமையும் உன்னை எப்பொழுதும் ஆசீர் வதிக்கின்றன.

❖ எத்தகைய வேலையும் எப்பொழுதும் உலகத்தின் பாராட்டுக ளைத் தன்னிடம் கொண்டிருக்கின்றது. அதனால் உடனடி உனது வேலைகளுக்கு மதிப்பு கொடு. வேலை செய்து அமைதியைப் பெறு.

❖ எல்லா மக்களுமே தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே. மனித சமுதாயத்தில் வர்க்கபேதமும் பாகுபாடும் இல்லை. ஒவ்வொரு ஆணும் பெண்ணும் அவரவர்களது எண்ணப்படியே வேலை செய் கிறார்கள்.



ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# பித்ரு குலதெய்வம் பெருதெய்வம் வழிபாடு

இந்து மத வழிபாடுகள், அக வழிபாடு, புற வழிபாடு, உருவ வழிபாடு, அருவ வழிபாடு, அரு உருவ வழிபாடு, குரு வழிபாடு, லிங்க வழிபாடு, எந்திர வழிபாடு, குடும்ப வழிபாடு (குல தெய்வ மற்றும் சிறு தெய்வ வழிபாடு), ஆலய வழிபாடு (பெரும் தெய்வ வழிபாடு), ஆத்மார்த்த வழிபாடு மற்றும் யாக வழிபாடு என்று பல்வகையாக பிரித்து அறியப் படும்.

இதில் கூறப்படும் அனைத்து வழிபாட்டிற்கு முன்பும் குலதெய்வ வழிபாடு என்பது மிக முக்கியமானதாகும்.

மேலே குறிப்பிட்டு உள்ள வழிபாட்டு முறையில், குடும்ப வழிபாடு என்பதே, குல தெய்வ மற்றும் சிறு தெய்வ வழிபாடு ஆகும். "இம்மை நலத்தை மட்டும் நோக்கி, இன்ப காலத்தும் துன்ப காலத்தும், ஆவிகளை ஒத்த சிறு தெய்வங்களுக்கு உணவு படைத்து காவு கொடுப்பது சிறு தெய்வ வழிபாடு" என்பது பாவாணர் கூற்று.

பரமாத்மா அறிவிக்கவே ஜீவாத்மா அறியப் பெறுகிறது என்பது வேத தத்துவம்.

பரமாத்மாவின் தூண்டுதலால், அதர்மங்களை கண்டு ஆத்திரப் படுபவர்களாக இருந்து கொண்டு, தம் குடும்பத்தையும், குலத்தையும், கொள்ளையர், பகைவர், கொடிய விலங்குகள் ஆகியவற்றிடம் இருந்து காப்பாற்றும் முயற்சியில் உயிர்விட்ட தியாக உள்ளங்களை, மனித உருவில் வாழ்ந்த தெய்வங்களாக பீடம் அமைத்து, அவர்கள் உயிருடன் இருந்த காலத்தே உண்ட உணவு வகைகள், மது பானம், போன்றவை படைத்து வழிபடுவது குல தெய்வ மற்றும் சிறு தெய்வ வழிபாடுகளில் ஒருவகை.

உதாரணமாக தஞ்சை பகுதியில் காத்தவராயனும், மதுரை பகுதியில் மதுரை வீரனும், குமரி பகுதியில் சின்னதம்பியும், மேலாங்கோட்டு இயக்கியும், நெல்லை பகுதியில், முத்தாரம்மனும், சங்கிலி பூதத்தானும், தமிழகம் எங்கும் இன்னும் பலவும் இந்த வகை தெய்வ வழிபாடு உள்ளது.

வாழ்ந்து இருந்த போது, சமுதாய நன்மைக்காக அற்புத செயல்கள் செய்திருந்து, பின் மரணம் அடைந்த பின்னும், அதே வேட்கையில், ஆவி உலகை விரும்பி ஏற்றுக் கொண்டு, பல்லாயிரம் ஆண்டுகள் பூமியில் ஆவி உருவில் சுற்றித் திரிந்து, தன் குலம் தழைத்து இருப்பதற்கு உதவி செய்கின்றனர். அவர்களுக்கும் கோவில் கட்டி வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

உதாரணமாக போகர் முதலான சித்தர்கள் மற்றும் அவ்வையும், திருக்குறள் தந்த திருவள்ளுவரும், கற்புக்கு அரசி கண்ணகி இந்த வகை தெய்வங்கள் ஆகின்றனர்.

சில இடங்களில் குலதெய்வங்களுக்கு சிலைகள் அமைத்தும், நடுகல் நட்டும், வீரக்கல் நிறுவியும் ஊரை காக்கும் காவல் தெய்வங்களாக வழிபடப்பட்டு வருகின்றனர். போராட்டங்களில் அவர்களுக்கு உதவிய குதிரை, நாய் போன்ற விலங்குகளும் சிலை அமைத்து நன்றி பாராட்டப் பட்டு வருகிறது.

அவரவருக்குரிய குலதெய்வங்களை வணங்கி, ஆராதித்து வருபவர் குடும்பங்களுக்கு ஒரு பாதுகாப்பு வளையத்தை ஏற்படுத்தி, கெட்ட ஆவிகள், பேய்கள் ஆகியவற்றிடம் இருந்து அக் குடும்பத்தை பாதுகாத்து வருவதுதான் குலதெய்வங்களின் முக்கிய பங்காகும்.

தன்னை ஆராதித்து வரும் குடும்பங்களுக்கு உடல் உபாதை, மனக் கஷ்டம் போன்றவவற்றை குறைக்கவும், நீக்கவும் பிரயாசப்படுகின்றன. திருமண தடை போன்ற தடைகள் நீங்கவும், மேம்பட்ட கல்வி, குழந்தை பேறு, வேலை வாய்ப்பு, தொழில் அபிவிருத்தி ஆகிய பல நன்மைகள் பெறவும் இக்குலதெய்வங்கள் உதவி புரிகின்றன.

குலதெய்வ வழிபாடு இல்லாத குடும்பங்களில் என்னதான் செல்வம் இருந்தாலும், நிம்மதி இருக்காது. இனம் தெரியாத துன்பம் துரத்தி கொண்டே இருக்கும்.

அப்படி கஷ்டத்துக்கு உள்ளானார்கள் ஒரு முறை அவரவர் குலத்திற்கு உரிய தெய்வங்களின் கோவிலுக்கு சென்று படையல் போட்டு வழிபட்டு திரும்புங்கள். வாழ்வில் திருப்பம் உண்டாகும். மேலும் மேலும் அங்கு செல்ல வேண்டும் என்ற எண்ணம் மேலிடும். இதில் முக்கியமாக பார்க்கவேண்டியது, குல தெய்வங்கள் வேறு பிதுர்கள் வேறு.

குல மற்றும் சிறு தெய்வங்கள், எல்லை அற்ற சக்தி உடைய பெரும் தெய்வங்களில் இருந்தும் மாறு பட்டாவை.

குல தெய்வங்கள் ஆவி உருவில் பூசாரி உடம்பில் வந்து அருள் வாக்கு சொல்லும் தன்மை உடையவை.

பெரும் தெய்வங்கள். அப்படி அல்ல. கோவில்களில் செய்யப்படும் அபிஷேக ஆராதனை மற்றும் இறைவனை புகழ்ந்து பாடும் வேத மந்திரங்களால் ஏற்படும் அதிர்வுகளால் மகிழும், இறைவன் பக்தர்களுக்கு அருளாசி வழங்கிக் கொண்டு இருக்கிறான் அன்றி அருள் வாக்கு சொல்வது இல்லை.

பெரும் தெய்வங்களின் ஆசி வேண்டுமானால், குலதெய்வம் வழிவிட வேண்டும் என்று முன்னோர்கள் கூறுவார்கள், இதற்கான பொருள், பெரு தெய்வங்கள் மட்டும் பெரிதாக நினைத்து குலதெய்வத்தை மறந்தால், குலதெய்வத்தின் மனவருத்தம் வழிபடுபவருக்கு கிடைக்கவேண்டிய முழு பலனை தடுத்து நிறுத்திவிடும்.

உதாரணத்திற்கு...

செல்போன் டவர் பல இடங்களில் இருந்தாலும், அதில் இருந்து வெளிவரும் வேவ் சரியாக, துல்லியமாக செல்போனுக்கு கிடைத்தால்தான் மற்றவருடன் பேச முடியும். இதுபோல பெரு தெய்வத்தின் ஆசி பக்தனுக்கு கிடைத்தாலும், குலதெய்வங்கள் அந்த ஆசியை எந்த தடங்கலும் இன்றி தன் பக்தனுக்கு கொண்டு சேர்ப்பதில் பெரும் பங்காற்றுகின்றது.

இதனால்தான், திருப்பதி, திருச்செந்தூர், காசி, ராமேஸ்வரம் போன்ற பெரும் தெய்வ கோவிலுக்கு செல்லும் முன், குலதெய்வத்தை வணங்கி விட்டு செல்ல வேண்டும் என்பது ஐதீக கடைபிடித்தனர் நமது முன்னோர்.



## பிரச்சனையற்ற சுகவாழ்வு பெற

# தேடிவரும் பித்ருக்களின் தாகம் பசியை தீருங்கள்



தட்சிணாயண காலத்தில் வரும் முதல் அமாவாசை என்பதால் ஆடி அமாவாசையும், உத்தராயண காலத்தில் வரும் முதல் அமா வாசை என்பதால் தை அமாவாசையும் முன்னோர் வழிபாட்டிற்கு ஏற்றதாக கருதப்படுகிறது. இதனிடையே புரட்டாசி மாதத்தில் வரும் மகாளய அமாவாசை முன்னோர்கள் பூலோகம் வரும் நாளாக கருதப்படுகிறது. முன்னோர்கள் பூலோகம் வரும் மகாளய பட்சம் செப்டம்பர் 15 முதல் செப்டம்பர் 28 வரை உள்ளது. இதை மகாளய பட்ச காலம் என்பார்கள்.

மகாளய பட்சம் புரட்டாசி அமாவாசையன்று முடி வடையும். அதற்கு முந்திய பதினைந்து நாட்களும் மகாளய பட்ச காலமாகும். இந்த புண்ணிய தினங்களில் பித்ருக்கள் வழிபாடு மிகச்சிறந்ததாகும்.

மகாளய பட்ச காலத்தில் நம் முன்னோர்களை திருப்தி செய்யும் வகையில் தர்ப்பணம் செய்ய வேண்டியது அவசியம். இந்நாளில் தீர்த்தத்தலங்களுக்குச் சென்று எள், தண்ணீர் இறைத்து, அவர்களது தாகம் தீர்க்க வேண்டும். இந்த காலகட்டத்தில் வரும் பரணி, மஹாபரணி என்றும், அஷ்டமி, மத்பாஷ்டமி என்றும் திரயோதசி கஜச்சாயை என்றும் கூறப்படும். மாதந்தோறும் முன் னோர்களுக்கு தானம் செய்ய முடியாதவர்கள் இந்தக் காலத்தில் தானங்களைச் செய்வதால் பன்னிரண்டு மாதங் களிலும் செய்த பலன் கிடைக்கும் என்பது ஐதீகம்.

முன்னோர்களை வணங்கும் இந்த சமயத் தில், காகத்திற்கு அன்னமிட வேண்டும். தினமும் இவ்வாறு செய்தால் பித்ருக்கள் மன மகிழ்ச்சியுடன் ஆசி வழங்குவார்கள் என்பதால் தோஷம் நீங்கப் பெற்று நல்வாழ்வு கிடைக்கும் என்று புராணங்கள் கூறுகின்றது.

மேலும் பித்ருக்குரிய சுலோகம்.:

ஓம் நம: பித்ரே ஜன்ம தாத்ரே
ஸர்வ தேவே மயாய ச
ஸுகதாய ப்ரசன்னாய
ஸுப்ரீதாய மகாத்மனே”

“என் பிறப்பிற்குக் காரணமான முன்னோர் களே! தெய்வீக சக்தி பெற்றவர்களே! உங்கள் ஆசியால் எங்களுக்கு நல்வாழ்வும் மகிழ்ச்சியும் உண்டாகட்டும். நல்லவர்களால் போற்றப்படும் உங்களை வணங்குகிறோம்”

என்பது இந்த சுலோகத்தின் பொருள்.

மானிட அவதாரம் எடுத்து வந்த இராம பிரான் இராமேஸ்வரத்தில் தனது தந்தை தசரதருக்கு” பிதுர் சிரார்த்தம் “செய்து வழி பட்டார். அஃது மானிட கடமைகளில் ஒன்று என்பதை வலியுறுத்தியுள்ளார்.

குடும்பத்தில் குழப்பம், பிரச்சனை, துயரங்கள் போன்றவை தொடர்ந்து இருந்தால், கண்டிப்பாக பித்ரு சம்பந்தப்பட்டதோஷம்தான் காரணமாக இருக்கும்.

மேற்கண்ட பிரச்சனைகள் தீர அவசியம் இந்த மகாளய பட்சக்காலத்தை பயன்படுத்தி, அனைத்து பிரச்சனைகளிலிருந்தும் விடுவிக்க நம் முன்னோருக்கு கோரிக்கையும் வைக்கலாம்.

பூலோகத்தில் வாசம் செய்யும் நம் முன்னோர் ஆசி இருந்தால், நமது குலதெய்வமும், நாம் வணங்கும் இஷ்ட தெய்வங்களின் அனுக்கிரகம் நேரிடையாக நமக்கு எந்தவித தடையுமின்றி கிடைக்கும்.

### புராணங்களில் மகாளயபட்சம்

கருடபுராணம், விஷ்ணு புராணம், வராக புராணம் போன்ற தெய்வீக நூல்களில் மகாளய பட்சத்தின் சிறப்புகள் கூறப்பட்டுள்ளன. இதற்கு முந்தைய யுகங்களில் மறைந்த முன் னோரைக் கண்ணால் காணும் பாக்கியம் மக்களுக்கு கிடைத்திருக்கிறது.

நாம் கலியுகத்தில் வாழ்வதால், அது சாத்தியமில்லாமல் போய்விட்டது. மகாளய கால நாட்களில் நம் முன்னோர்கள் நமக்கு ஆசிவழங்குவதற் காகவே பிதுர் லோகத்தில் இருந்து, பிதுர்தேவதைகளிடம் அனுமதி பெற்று நம்மைப் பார்க்க பூலோகத்திற்கு வருகின்றனர். இந்நாட்களில் நம் வீடுகளை மிகத் தூய்மை யாக வைத்துக் கொள்ள வேண்டும்.

சைவம் மட்டுமே உண்ண வேண்டும். வீட்டில் ஒருவருக்கொருவர் சண்டையிடக் கூடாது. வீணான பொழுதுபோக்கு அம்சங்களை அறவே தவிர்த்து, உள்ளத்தையும் உடலையும் தூய்மையாக வைத்துக் கொள்வது மிகவும் அவசியம்.

இந்த பதினான்கு நாட்களும் முன்னோர் வழிபாட்டினைச் செய்வது சிறப்பு. புண்ணிய நதிக்கரைகள், தீர்த்தக்கரைகள், ராமேஸ்வரம் போன்ற கடற்கரைத்தலங்களுக்கு ஒருநாளாவது செல்ல வேண்டும். முடியாதவர்கள் காகத்திற்கு அன்னமிடலாம்.

பசுவுக்கு புல், பழம் கொடுக்கலாம். ஸ்ரீமந்நாரா யணனே ராமாவதார, கிருஷ்ணாவதார காலங் களில் பிதுர்பூஜை செய்து முன்னோர்களை வழிபாடு செய்துள்ளதாக புராணங்கள்

கூறுகின்றன. எதுவும் செய்ய இயலாதவர்கள் முன்னோரின் பெயர்களை உச்சரித்து, "காசி காசி என்று சொன்னபடியே, வீட்டு வாசலிலேயே எள்ளும் தண்ணீரும் விட்டு கூட திதி பூஜையைச் செய்யலாம். பின்னர், பூஜையறையில் நம் முன்னோர்களை நினைத்து வழிபாடு செய்ய வேண்டும். இந்த எளிய பூஜை அளவற்ற நன்மைகளைத் தரக்கூடியது.

எப்படி கிருஷ்ண பட்சம், சுக்கில பட்சம் என்ற இரண்டு உள்ளது. சுக்கில பட்சம் என்றால் வளர் பிறை, கிருஷ்ண பட்சம் என்றால் தேய்பிறை. அதுபோல் மகாளய பட்ச காலத்தை முன்னோர்க்குரிய காலமாக போற்றுவது நன்மை பயக்கும்.

தர்ம சாஸ்திரங்களுள் மகாளய பட்ச நாட்கள் மிகவும் முக்கியமான நாட்களாகச் சொல்லப்பட்டிருப்பதால், இந்த நாட்களில் பிதுர்பூஜை, செய்வது போற்றப்படுகிறது. நம் முன்னோர்கள், நம்மில் வாழ்ந்து அமரர் ஆனவர்களுக்கு யாரும் தர்ப்பணம் செய்யலாம். உறவினர்களுக்கு மட்டுமல்ல; மறைந்த நண்பர்களுக்கும் மிக நெருங்கியவர்களுக்கும் தர்ப்பணம் கொடுக்கலாம் என்று சாஸ்திரம் சொல்கிறது.

## கயா தோன்ற காரணமான கயாசுரன்

இதில் வடநாட்டிலுள்ள விஷ்ணுபாதம் என்னும் இடம் மிகவும் சிறப்பாகச் சொல்லப்படுகிறது. அதற்குக் காரணமாக புராணத்தில் ஒரு நிகழ்வுக்குறிப்பு உண்டு.

கயாசுரன் என்ற அசுரன் மகாவிஷ்ணுவை நினைத்து தவம் செய்தான் யார் ஒருவர் என்னை எந்த நிலையில் தரிசித்தாலும். அவர்கள் எந்தவிதத் தடையுமின்றி வைகுண்டம் போய்விட வேண்டும் என்று மகாவிஷ்ணுவிடம் வரம் பெற்றான்.

இந்த வரத்தினைப் பெற்ற கயாசுரன் அக்கிரமங்கள் பல புரிந்தான். முனிவர்களும் தேவர்களும், அவனைச் சந்திக்கவே பயந்தார்கள். கொடூர குணம் கொண்ட அவனை அழிக்கவேண்டுமென்று மகாவிஷ்ணுவிடம் முனிவர்களும் ரிஷிகளும் முறையிட்டனர்.

உடனே மகாவிஷ்ணு பிரம்மனிடம் நீ கயாசுரனிடம் சென்று, யாகம் செய்ய புனிதமான இடம் தேவைப்படுகிறது; உன் உடல் தான் மிகவும் புனிதமானது என்று தேவர்கள் அனைவரும் நினைப்பதால் அதைத் தரவேண்டும் என்று கேள் என்றார். பிரம்மனும் கயாசுரனிடம் சென்று யாகம் செய்ய அவன் உடலைக் கொடுக்கும்படி கேட்டார்.

பிரம்மனே தம்மிடம் யாகம் செய்ய தன் உடலைக் கேட்கும்போது கொடுக்காமல் இருக்க முடியுமா? என்று கயாசுரன் சம்மதித்தான். அவன் உடல் பூமியில் வட்டக்கல்லாக மாறியது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு தேவர்கள் அவனது மார்பின்மீது ஏறி நின்று அவனைக் காலால் அழுத்தினார்கள். பெரும் பாறைகளைக் கொண்டும், மிகப்பெரிய யானைகளை அவன் மீது ஏறி நிற்க வைத்தும் அவன் மாண்டு போகாததால், தேவர்கள் மகாவிஷ்ணுவை வேண்ட அவர் அங்கு தோன்றினார்.

பூமியில் வட்டக்கல்லாக மாறிப் படுத்திருந்த கயாசுரன்மீது தன் காலை வைத்து அழுத்தினார். மூச்சுத்திணறிய கயாசுரன், "பகவானே, என்னை மன்னித்துவிடுங்கள். நான் செய்த அக்கிரமத்திற்கு நீங்கள் எந்த தண்டனை கொடுத்தாலும் மகிழ்ச்சி. உங்கள் பாதம் பட்டதால் நான் புனிதமானேன்" என்றான்.

உடனே மகாவிஷ்ணு, "உன் இறுதிகாலம் நெருங்கிவிட்டது. நீ மடிவதற்குள் என்ன வரம் வேண்டுமோ கேள்" என்றார்.

அதற்கு கயாசுரன், "யாகம் செய்வதற்காக என் உடலை வட்டக்கல்லாக மாற்றிப் படுத்திருந்தேன் ஆகையால் நான் உயிரை விடும் இந்த இடம் பெரும் பாறையாக மாறவேண்டும். அந்தப் பாறையில் தங்கள் பாதச்சுவடு பதிந்திருக்க வேண்டும். மேலும் இந்தப் பாறையருகில் பித்ருக்களுக்கு யார் பிண்டம் வைத்துப் பூஜிக்கிறார்களோ, அவர்கள் செய்த பாவங்கள் நீங்க வேண்டும்" என்று வேண்டினான்.

மகாவிஷ்ணுவும் அவன் வேண்டுதல்படி அருள்புரிந்தார். அன்றிலிருந்து இன்று வரை அந்த இடத்தில் பித்ரு பூஜைகளும் பிண்டம் வைப்பதும் தர்ப்பணம், சிரார்த்தம் முதலியவற்றையும் மக்கள் வைதீக விற்பன்னர்கள் உதவியுடன் செய்து, பாவங்களைத் தொலைத்து முன்னோர்களிடம் ஆசிபெற்றுச் செல்கிறார்கள். அந்த இடம்தான் கயை என்னும் புனிதத் தலம் ஆகும்.

கயையில் இருக்கும் அந்தப் பாறையினை விஷ்ணு பாதம் எனப் போற்றுகிறார்கள். அங்குள்ள கோயில் விஷ்ணு மந்திர் என அழைக்கப்படுகிறது. கயையில் அருள் பாலிக்கும் திருமாலை சுதாதரன் என வழிபடுகிறார்கள்.




வடநாட்டில் உள்ள ஹரித்வார், ரிஷிகேஷம், வாரணாசி எனப்படும் காசி, அட்சய வடம் போன்ற புனிதத் தலங்கள் சிறப்பாகப் பேசப்பட்டாலும் கயா சிரார்த்தம் மட்டும் மிகவும் உயர்வாகச் சிறப்பிக்கப்படுகிறது.

மகாளய பட்ச காலத்தில், எமன் எல்லா பித்ருக்களையும் தனது உலகத்திலிருந்து விடுவித்துவிடுவதால், அவர்கள் பூலோகத் தில் தங்கள் வாரிசுகள் தரப்போகும் பிண்டத்துக்காகக் காத்துக் கொண்டிருப்பதாக ஐதீகம் கயை போன்ற புனிதத் தலங்களுக்குச் செல்ல முடியாதவர்கள் அருகிலுள்ள புனித நீர் நிலைகளில் பித்ரு பூஜை செய்து பலன் பெறலாம்.

வடக்கே காசி, பத்ரிநாத், ஹரித்வார், பிரயாகை, பூரிசோம்நாத், அட்சயவடம்;

கர்நாடகாவில் திருக்கோகர்ணம்;

தமிழகத்தில் திருவெண்காடு, கும்பகோணம்; மகாமகக்குளம், ராமேஸ்வரம், திருப்புல்லாணி உள்ளிட்ட பல தலங்கள் பித்ரு தர்ப்பணத்துக்கு உகந்தவை.

காவேரிக் கரையோரம் ரங்கநாதர் அருள் புரியும் திருத்தலங்களும் சிறப்பானவை.

அதில் தமிழ்நாட்டில் கயாவுக்கு சமமான புனித இடம் திருவாரூர் அருகிலுள்ள பூந்தோட்டம் என்னும் ஊரிலிருந்து மூன்று கிலோமீட்டர் தூரத்திலுள்ள திலதர்ப்பணபுரி ஆகும். இங்கு மகாளய பட்ச பூஜை தர்ப்பணம் செய்தால் அவர்களின் பித்ருக்கள் நேரில் வந்து படையலைப் பெற்றுக் கொண்டு ஆசி வழங்குவதாக நம்பிக்கை.

திவசமும் தர்ப்பணமும் செய்கிறபோது, பூலோகத்திலோ அல்லது வேறு எங்கோ எந்த உருவத்திலோ தங்கள் பாவ புண்ணியங்களுக்கேற்ப பிறந்திருக்கிற மூதாதையர்களுக்கு, இங்கே சிரார்த்தத்தில் கொடுக்கிற எள், தண்ணீர், பிண்டம், முதலானவற்றை பித்ரு தேவதைகள் அவர்கள் விரும்பும் உணவாக மாற்றி அங்கே கிடைக்கச் செய்வதாக சாஸ்திரம் சொல்லும்.

எனவே தீர்த்த சிரார்த்தமும், திவசமும், பித்ரு பூஜைகளும் நம்மையும் நம் வாரிசுகளையும் வளமுடன் வாழவைக்கும் என்பதில் ஐயமில்லை.

www.aanmeegamalar.com

# ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்

## அற்புதமான வரலாறும் அதன் சிறப்புகளும்



அம்பிகையின் துதி நூல்களில் முதலிடம் வகிப்பது ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம். இதை உபதேசித்தவர் ஹயக்ரீவர். உபதேசம் பெற்றவர் அகஸ்திய முனிவர். உபதேசம் செய்தவரும் சாதாராணமானவர் அல்ல, உபதேசம் பெற்றவரும் சாதாரணமானவர் அல்ல.

பிரம்மதேவரிடம் இருந்து அசுரன் ஒருவன் வேதங்களைக் கவர்ந்துகொண்டு போனபோது, மகாவிஷ்ணு ஹயக்ரீவராக (குதிரை முகம் கொண்டவராக) வந்து, அசுரனைக் கொன்று, வேதங்களை மீட்டார். ஞானத்தின் வடிவமே ஹயக்ரீவர். அப்படிப்பட்டவர், லலிதா ஸஹஸ்ரநாமத்தை உபதேசம் செய்திருக்கிறார். உபதேசம் பெற்ற அகஸ்தியரின் பெருமையோ, அளவில் அடங்காது, அதில் ஒன்றை மட்டும் இங்கே பார்க்கலாம்.

சிவனுக்கும் பார்வதிக்கும் திருமணம் நடந்தபோது மகாவிஷ்ணு, பிரம்மா, இந்திரன் முதலான தேவர்கள் அனைவரும் அங்கு கூடினார்கள். அதன் காரணமாக, வடகோடு தாழ்ந்து தென்கோடு உயர்ந்தது. அப்போது சிவபெருமான் அகஸ்தியரைத் தென்திசைக்கு அனுப்ப, பூமி சமநிலை பெற்றது. இந்தக் கதை அனைவருக்குமே தெரிந்ததுதான். ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் ஜோதியான சிவபெருமான் முதல் தேவர்கள் வரை அனைவரும் ஒரு பக்கம் இருக்க.... அகஸ்தியர் மட்டும் தென்திசை போனார். அதனால் பூமி சமநிலை ஆனது என்றால் என்ன பொருள்?

அந்தப் பக்கம் இருந்த அவ்வளவு பேருக்கும் சமமானவர் அகஸ்தியர் என்பது தானே இதன் பொருள்? அதாவது, அனைத்து தெய்வங்களுக்கும் சமமானவர் அகஸ்தியர். அப்படிப்பட்ட மகாபுருஷர் லலிதா ஸஹஸ்ரநாமத்தை உபதேசம் பெற்றிருக்கிறார்.

ஞானத்தின் வடிவமான ஹயக்ரீவர் உபதேசிக்க, அதை அனைத்து தெய்வங்களுக்கும் சமமான அகஸ்தியர் கேட்டிருக்கிறார் என்றால், ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் எந்த அளவுக்கு உயர்ந்ததாக மேன்மையானதாக இருக்க வேண்டும்.

பதினெட்டு புராணங்களில் ஒன்றாகிய பிரம்மாண்ட புராணத்தில், லலிதோபாக்யானம் என்ற பகுதியில் லலிதா தேவியின் திரு அவதாரமும், சரிதமும் கூறப்படுகின்றன. அதன் ஒரு பகுதியாக, அன்னை பராசக்தியின் ஆயிரம் திருநாமங்களைக் கூறும் லலிதா



ஸஹஸ்ரநாமம் என்னும் மகோன்னதமான இந்த ஸ்தோத்திரம் உள்ளது. ஹயக்ரீவர் என்ற மகரிஷி (விஷ்ணு அவதாரமாகக் கூறப்படுவதும் உண்டு) அகஸ்திய மகரிஷிக்கு உபதேசம் செய்வதாக அமைக்கப்பட்டுள்ளது. அகஸ்தியரும், அவரது மனைவி லோபாமுத்திரையும் சக்தி வழிபாட்டு நெறிகளை உருவாக்கிய குருமார்களில் முதன்மையாக வைத்துப் போற்றப்படுபவர்கள் (லோபாமுத்ரார்ச்சிதா லோபாமுத்திரையால் அர்ச்சிக்கப் பட்டவள் என்றே ஒரு நாமம் லலிதா ஸஹஸ்ரநாமத்தில் உண்டு). தேவியின் கட்டளைக்கிணங்க வாசினி முதலான வாக் தேவதைகளே பிரத்யட்சமாகி இந்த தெய்வீக ஸ்தோத்திரத்தைச் செய்ததாகவும் புராணக் குறிப்பு உண்டு.

ஸஹஸ்ரநாம நூல்களிலேயே தனித்துவமும், தனிச்சிறப்பும் மிக்கதாக லலிதா ஸஹஸ்ரநாமம் உள்ளது. அபாரமான கவித்துவமும், சொல்லழகும், ஓசை நயமும் கொண்டது. சாக்த நெறியின் தத்துவங்கள் பெரும் வீச்சோடும், காம்பீர் யத்தோடும் இதில் முன் வைக்கப்படுகின்றன. வேதாந்த தத்துவ உண்மைகளை மந்திரம், யந்திரம், தந்திரம் ஆகிய நுட்பமான குறியீடுகளாக வெளிப்படுத்துவது சாக்த உபாசனை. பிரம்ம வித்தை என்று வேதாந்தம் கூறும் உண்மைகளையே சக்தி உபாசகர்கள் ஸ்ரீவித்யை என்று அழைக்கிறார்கள். இந்தக் குறியீடுகளை சூனியத்தில் மிதக்க



விடாமல் அவற்றுக்கு அழகும்,முழுமையும் அளிக்கும் விதமாகவும் லலிதா ஸஹஸ்ரநாமம் அமைந்துள்ளது.

லலிதா ஸஹஸ்ரநாமத்திற்கு ஒரு குறிப்பிட்ட வடிவமும், அமைப்பும், நடையும் உள்ளது. இதில் திருநாமங்கள் கோர்க்கப் பட்டிருக்கும் வரிசையே ஒரு குறிப்பிட்ட சித்தாந்தக் கருத் தை விளக்குவதாக உள்ளது. அம்பாளின் ஆயிரத் தெட்டு நாமங்களும்,

1. ஸ்ரீமாதாவின் அவதாரம்,
2. கேசாதி பாத வர்ணனை (ஸ்தூல ரூபம்),
3. பண்டாசுர வதம்,
4. மந்த்ர வர்ணனை (சூட்சும ரூபம்),
5. குண்டலினீ ரூபம்,
6. பக்த அனுக்ரஹம்,
7. நிர்க்குண உபாசனை,
8. சகுண உபாசனை,
9. பஞ்சப்ரஹ்ம ரூபம்,
10. க்ஷேத்ரக்ஷேத்ரக்ஞ ரூபம்,
11. பீடங்களும், அங்க தேவதைகளும்,
12. யோகினீ தியானம்,
13. விபூதி விஸ்தாரமும், மார்க்க பேதங்களின் சமரசமும்,
14. சிவசக்தி ஐக்கியம்,

ஆகிய வரிசையில் பேசுபொருள்களைக் குறித்து அமைந்திருப்பதாக உள்ளது.

தேவர்களின் வேண்டுதலுக்கு இணங்கி அக்னிகுண்டத்தில் அவதரித்தவள் லலிதா தேவி. நான்கு கைகளில் பாசம், அங்குசம், கரும்புவில், மலர்க்கணைகள் ஆகியவற்றை ஏந்தியவள். இந்தப் புராண விளக்கம் தியானத்திற்குரிய தத்துவக் குறியீடாக லலிதா ஸஹஸ்ரநாமத்தின் தொடக்கத்திலேயே வந்து விடுகிறது.

சிதக்னுனிகுண்டஹு ஸம்பூதா அறிவாகிய அக்னி குண்டத்தில் தோன்றியவள்,

ராகஸுஸ்வரூப பாசா'ட்யா ஆசை வடிவான பாசக்கயிற்றை ஏந்தியவள்,

க்ரோதா கார அங்குசோ'ஜ்வலா தீமையைப் பொசுக்கும் கோப வடிவான அங்குசத்தை கையில் ஏந்தி ஒளிர்பவள்,

மனோரூப இக்ஷு கோதண்டாஹு மனமாகிய கரும்புவில்லை உடையவள்,

பஞ்சதன்மாத்ர ஸாயகா ஐந்து புலன்களாலும் உணரப்படும் ஒலி, தொடுகை, உருவம், ரசம், மணம் என்ற ஐந்து தன்மாத்திரைகளையும், ஐந்து மலர்க்கணைகளாகக் கொண்டவள். பாசக் கயிற்றால் உயிர்களை ஆசையில் பிணிப்பவளும், பின் தனது அங்குசத்தால் அதனை வெட்டி எறிபவளும் அவளே.

மனமாகிய வில்லில் ஐம்புலன்களாகிய மலர்க்கணைகளைப் பொருத்தி தேவி பிரபஞ்ச விளையாட்டு விளையாடுகிறாள்!.

தத்துவ அளவில் ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் தூய அத்வைத நிலையில் இருந்தே பாடப்பட்டது என்பது இந்த நாமங்களின் பெருங்கடலின் ஒரு துளியை அள்ளிப் பருகினாலே தெரிய வரும் விஷயம். நிர்த்துவைதா த்வைதம் எனப்படும் இருமை நோக்கை நீக்குபவள், த்னுவைதவர்ஜிதா இயல்பாகவே இருமை நிலை இல்லாதவள், ஸாமரஸ்ய பராயணா சமரசத்தில் நிலை பெற்றவள் என்பனவும் அன்னையின் திருநாமங்களே. இந்த அடிப்படையான சமரச பாவத்துடனேயே ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமத் தை நாம் பாரா யணம் செய்யவும், தியானம் செய்யவும் வேண்டும். அப்படி தியானம் செய்பவர்களுக்கு நிர்க் குணமும் சகுணமும், ஞானமும் பக்தியும் கர்மமும், வாமாசாரமும் தட்சிணாசாரமும், யோகமும் போகமும், கோரமும் சாந்தமும், இல்லறமும் துறவறமும் எல்லாம் அன்னையின் உள்ளத் துக்கு உகந்ததாகவும், எல்லாமாகி இலங்கும் அவளை அடைவதற்கான மார்க் கங்களாகவே திகழும்.

தத்துவங்களே அன்னையின் இருக் கைகளாகவும் (தத்வாஸனா), காற்சிலம்பின் மணி களாகவும், கையில் ஏந்தி விளையாடும் பூக்களாகவும், மகா காளிக் கோலத் தில் அவள் அணியும் மண்டையோட்டு மாலைகளாகவும் ஆகிவிடுகின்றன!

அதுவே லலிதா ஸஹஸ்ரநாமம் அளிக்கும் பரவச அனுபவம். இந்த துதியைப் பொருள் உணர்ந்து படிக்கும் போதும், தியானிக்கும் போதும் தர்க்க மனத்தின் எல்லைகளுக்கு அப்பால் அது சுழன்றடித்துச் செல்கிறது. பக்தியுடன் இதைப் பாராயணம் செய்யும் ஒவ்வொரு முறையும் ஏதோவொரு நாமம் நம் மனதில் ரீங்கரித்து மொழியின் சாத்தியங்களை மீறி ஒரு ஆன்மிகப் பெருவெளிக்குள் நம்மை அழைத்துச் செல்கிறது.

இவ்வளவு சிறப்புகள் பெற்று தன்னுள்
அனைத்து தெய்வ சக்திகளையும்
அடக்கியுள்ள லலிதா ஸஹஸ்ர நாமத்தை
நாமும் கூறுவதால்
இக, பர சுகத்தை எளிதாக
அடையலாம்.



Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# ஆன்மிகமலர்
## மெயில் புக்



**மாதம் தோறும் இரண்டு இதழ்களாக**
**(இ-புக் வடிவில்) வெளிவரும்**
**ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தில் நீங்களும்**
**இணைந்து ஆன்மிக சேவையாற்றலாம்....**

உங்கள் பகுதியில் உள்ள கோயில்களின் சிறப்புகள், மகான்களின் சிறப்புகள், மற்றும் உங்களுக்கு தெரிந்த ஆன்மிக செய்திகளையும் எங்களுடன் பகிருங்கள்...

**30ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆன்மிக அன்பர்கள் படித்து பயன்பெற ஒரு பாலமாக இருப்போம்**

**மேலும் தகவலுக்கு 8825844033 என்ற வாட்சப் எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்**